# கச்சதீவு யாத்திரிகர் திரும்பினர்; சட்டவிரோதக் குடியேற்றக்காரர் ஐவர் கைது

Registered as a News paper in Ceylon    விலை சதம் 15    ★ ★

ஈழநாடு
சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49    மலர் 11
போன்: 389    இதழ்: 35
National Tamil Daily    தேசிய தினசரி

ஈழநாடு
சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம்    பங்குனி 4    ஜுஹஜ் 27    திங்கட்கிழமை    [17-3-69

# கடைசிநேர சமரச பேச்சுக்கு ஆலயபரிபாலகர்கள் வரவில்லை

## ஆலயபிரவேசம்; இருதரப்பும் தீவிரம்

**யாழ்ப்பாணம், திங்கள்**
**மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்கோவிலில் இன்று நடைபெறவிருக்கும் ஆலயப்பிரவேசம்பற்றி சுமுகமான முடிவு காண்பதற்கு நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் கச்சேரியில் நடந்த மகாநாட்டில் எல்வித முடிவும் ஏற்படவில்லை. ஆலய பரிபாலன குழுவினர் இம்மகாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.**

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீற்றர்ஸ் தலைமையில் நேற்று நடந்த மகாநாட்டில் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி, முருகேசம்பிள்ளை, வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் திரு. எஸ். ரி. என், நாகரத்தினம், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க தென்மராட்சி கிளைத்தலைவர் திரு. க. சுப்பையா, சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணித்தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம்ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆலயக் கதவுகள் பூட்டி தெரிவித்ததாக அறியப்படுகிறது.

குழப்பமான நிலைமையை தவிர்ப்பதற்கு ஆலயத்தைப் பூட்டி, பூசைகளை நிறுத்துவதுதான் சிறந்த வழியென திரு. எம். சி. சுப்பிரமணியம் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தால் வழக்கு தீர்ப்பு வரும் வரை, கோவிலைப் பூட்டி, பூசை பொங்கலை நிறுத்த வேண்டுமென திரு. நாகரத்தினம் மேலும் தெரிவித்ததாக அறியப்படுகிறது. இக் கருத்தை எம். சி. சுப்பிர

## பொலிஸ் அதிபர் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், திங்கள்
வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்றுக்காலை மட்டுவில் அம்மன் கோவிலுக்கு சென்று அங்குள்ள நிலைமையை நேரில்பார்வையிட்டார்.

எல்லாரும் வெளியில் பொங்கி அதே இடத்தில் படைக்க ஏற்ற ஒழுங்குகள் செய்யப் பட்டிருப்பதாகவும் பூசகர்களும், கோவில் பணியாளர்கள் மட்டுமே, கோவிலுக்குள் செல்ல அனு

## நீதிமன்றத் தீர்ப்புவருர்வரை வெளிவீதியில்தான் பொங்கல்

யாழ்ப்பாணம் திங்கள்
வழக்கம்போல் பொங்கல் பூசைகள் நடைபெறும். ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக கோட்டில் வழக்குதாக்கல் செய்யப்பட்டிருப்பதால் தீர்ப்பு வரும்வரை ஆலயக் கதவுகள் பூட்டப்பட்டிருக்கும். எல்லோரும் வெளி வீதியில் பொங்கி அதே இடத்தில் படைக்க ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கிறது.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் மனேசர் திரு குழந்தைவேலு மேற்கண்டவாறு கூறினர்,

திரு குழந்தைவேலு மேலும் கூறியதாவது:- பக்தர்கள் வழக்கம்போல் இம்முறையும் பொங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. வழக்கம்போல கோயில் பணியாளர்கேணியிலிருந்து பொங்கலுக்கு தண்ணீர் வழங்குவார்கள்.

வறட்சி காரணமாக இம்முறை கேணித் தண்ணீர் பொங்கலுக்கு மட்டுமே வழங்கப்படும். குளிப்பதற்கும் மற்றும் தேவைகளுக்கும் கிணற்று நீர பாவிக்க ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

வழக்கம்போல பொங்கல் உற்சவத்தை இம் முறையும் சிறப்பாக நடத்த மட்டுவில், சரசாலைப் பகுதி மக்கள்பூரண ஒத்துழைப்புத்தந்துள்ளார்கள்.

## ஆலயவாசல்களில் பொலிஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம் திங்கள்
மட்டுவில் அம்மன்கோயில் வடக்கு, தெற்கு, மேற்கு வாசல்களில் பொலிஸார்

சிதம்பரப்பிள்ளை, கே.ஜெயதேவன், எம். குழந்தைவேலு எஸ். சிவகுரு கே. மயில்வாகனம் குடிநீர் வசதி

## ஐவர் கைது

யாழ்ப்பாணம், திங்கள்
கச்சதீவு புனித அந்தோனியார் திருநாளுக்குச்சென்றிருந்த யாத்திரிகர்கள் எல்லோரும் திரும்பிவிட்டனர். நேற்று கச்சதீவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு குடியேற முயற்சித்ததாகச் சந்தேகிக்கப்பட்ட ஐவர் கைதுசெய்யப்பட்டனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் திருநாள் நேற்றுக் காலையுடன் முடிவுற்றது. சென்ற வருடத்தைப்போல் இம்முறை இலங்கையின் முப்படைகளும் கச்சதீவில் காணப்பட்டபோதும் வயர்லஸ் கருவிகளோ மற்றும் உத்தியோகபூர்வமான பொருட்களோ அவர்களிடம் காணப்படவில்லை.

இலங்கைப் போர்க்கப்பலான கஜபாகு தீவிலிருந்து சுமார் அரைமைல் உள்ளுக்குள் நங்கூரமிட்டிருந்தது.

மற்றும் கடற்படையைச் சேர்ந்த படகுகள் கச்சதீவில் நின்ற போர்க்கப்பலுடன் இணைக்கப்பட்டிருந்தன

இரகசியப் பொலிசார் கச்சதீவில் முகாமிட்டிருந்தனர். விமானப்படையைச் சேர்ந்த இரண்டு விமானங்கள் தாழப்பறந்து கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன.

மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கச்சதீவுக்கு இம்முறை வந்திருந்தனர்.

இலங்கையிலிருந்து மதுபானம் கொண்டுசெல்லத் தடைஇருந்தபோதும் சாராயம் அங்கு கொண்டுவரப்பட்டு போத்தல் 30 ரூபா வரை விற்கப்பட்டதாம். தேங்காய் எண்ணை, ஹோர்லிக்ஸ், பிஸ்கட் ஆகிய பொருட்களுக்கு கச்சதீவில் பெரும் கிராக்கியிருந்தது.

## தடைகளை நீக்கிவிட்டு ஆலயப் பிரவேசம்

### தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க கூட்டத்தில் டானியல்

கொழும்பு, ஞாயிறு
'ஆலய வழிபாட்டுக்குச் செல்லும் ஹரிஜன மக்களுக்குத் தடைகளை ஏற்படுத்தி வெளியே தடுத்து நிறுத்தும் பட்சத்தில் அத்தடைகளை நீக்கிவிட்டு ஆலயப் பிரவேசம் செய்ய தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தயாராகவிருக்கிறது.'

இவ்வாறு கொழும்பில் இன்று நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் கூட்டத்தில் பேசிய திரு. கே. டானியல் குறிப்பிட்டார்.

கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா தலைமையில் கூடிய இக்கூட்டத்தின் ஆரம்பத்தில் தீண்டாமை பிரச்னையில் காலமான குமரேசு கார்த்திகேசு, இரத்தினம், வைத்திலிங்கம் ஆகியோருக்கு இருநிமிடமௌன அஞ்சலி செலுத்தப்பட்டது

அடுத்துப்பேசிய திரு. என். சண்முகதாசன், ''அசுரர்களை அழித்து நீதியை நிலைநாட்ட முருகக் கடவுள் வேல் எடுத்ததாக கந்தபுராணம் கூறும். அதுபோல ஹரிஜன மக்கள் தம் மீது சுமத்தப்பட்டுள்ள அநீதிகளை அகற்ற ஆயுதமேந்த வேண்டும்' என்றார்.

## இன்று விசாரணை

யாழ்ப்பாணம், திங்கள்
வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவில் நிர்வாக சீர்கேடு சம்பந்தமாக ஆராய்வதற்காக அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்ட ஆராய்வுக்குழு இன்று மாலை 4 மணிக்கு தனது விசாரணையை நடத்துகிறது.

விசாரணைக்குழுவில் திருவாளர்கள் கே. ஐயாறு, என். வாமதேவா, எம். மயில்வாகனம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## மின்சாரவெட்டு பற்றி ஆலோசனை

கொழும்பு, ஞாயிறு
கொழும்புப்பகுதியில் வெட்டப்பட்ட 4 மணிநேர மின்சாரத்தை வெட்டாமல் இரவு பகலாக விநியோகிக்க மின்சார இலாகா ஆலோசித்து வருகிறது மின்சார வெட்டால் இப் பகுதியில் பலத்த சிமரங்கள் ஏற்பட்டுள்ளதே இதற்குக் காரணமெனத் தெரிகிறது.

காசில் ரீபகுதியில் நிலவி வந்த வரட்சி நீங்கி, இன்றும் நேற்றும்மழைபெய்துள்ளதால் மின்சாரத்தை தொடர்ந்து இரவு பகலாக வழங்க முடியும் என மின்சார இலாகா கருதுகிறது.

## புதிய குடியேற்றத்திட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்
பல்லவராயன்கட்டு விநாயகபுரம் முளங்காவி என்னுமிடத்தில் இம் மாத இறுதியில் புதிய குடியேற்ற வாசிகளை அரசாங்கம் குடியமர்த்துகிறது குறிப்பாக தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளிலிருந்து குடியேறும் இக் குடியேற்றத்திட்ட வாசிகளுக்கு அரசாங்கம் தலா. 1000 ரூபா வழங்கும் என்று தெரிகிறது.

## இன்சூரன்ஸ்

# மூன்றுவருடம்கட்டியவருக்கு வீடு கட்ட கடனுதவி

## 100 லட்சம் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஞாயிறு
3 வருடகாலத்துக்கு இன்சூரன்ஸ் கட்டிவந்தவர்களுக்கு வீடுகட்டுவதற்கு கடன் வழங்கும் திட்டமொன்றை இன்சூரன்ஸ் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்க முடிவுசெய்துள்ளது.

3 வருடம் தொடர்ந்து இன்சூரன்ஸ் கட்டியவர்கள்

டிய அவசியமில்லையென்றும் கூறப்படுகிறது.

இன்று வர்த்தக மந்திரி வீடமைப்பு கடன் வழங்கும் திட்ட அறிக்கையைசமர்ப்பித்தார். காப்புறுதிக்கூட்டுத்தாபனம், வீட்டுக்கடனுக்கென 100 லட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளது. 1968-69-ம் ஆண்டுக் காலத்தில் 500

## இதனால் நஷ்டம்

உடுப்பிட்டி ஞாயிறு
விதை உருளைக் கிழங்கைக் கூடுதல் விலை கொடுத்து வாங்கி விதைத்த விவசாயிகள் உருளைக் கிழங்கின் விலை தற்போது குறைந்துள்ளதால் அவற்றை விற்க முடியாது தடுமாறிக் கொண்டிருக்கின்றனா.

இதனல் அதிக நஷ்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் திரு. எஸ். ரி. என், நாகரத்தினம், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க தென்மராட்சி கிளைத்தலைவர் திரு. க. சுப்பையா, சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணித்தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம்ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆலயக் கதவுகள் பூட்டியிருப்பதற்கு எதிராக சுப்பிறீம்கோர்ட்டில் வழக்குத் தாக்கல்செய்தும், கதவுகளை திறக்க கோர்ட்டின் உத்தரவை கோரும்படியும் அரசாங்க அதிபர் ஆலோசனைவுற்றது.

படுகிறது.

ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தால் வழக்கு தீர்ப்பு வரும் வரை, கோவிலைப் பூட்டி, பூசை பொங்கலை நிறுத்த வேண்டுமென திரு. நாகரத்தினம் மேலும் தெரிவித்ததாக அறியப்படுகிறது. இக்கருத்தை எம். சி. சுப்பிரமணியமும் ஏற்றுக்கொண்டாராம்.

நேற்று நண்பகல் 12 மணிக்கு எவ்வித முடிவும் எடுக்கப்படாமல் மகாநாடு முடி

# "ஆலயப்பிரவேசம் நடந்தேதீரும்"

யாழ்ப்பாணம், திங்கள்

சட்டத்தை நிலைநாட்டுவது பொலிஸாரின் கடமை. உரிமையை நிலைநாட்டுவது எங்களின் கடமை. எத்தனை தடைகள் போட்டாலும் ஆலயப்பிரவேசம் நடந்தே தீரும். பெரும்பான்மைஇன மக்கள் வெளியில் நின்று வழிபடட்டும். அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. நாங்கள் ஆலயப் பிரவேசம் செய்தே தீருவோம். இது தான்எங்கள் கடைசிமுடிவு'.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க தலைவர் நாகரத்தினம், கச்சேரி மகாநாட்டிற்கு பின்னர் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. நாகரத்தினம்மேலும் கூறியதாவது:

பொலிசார் எங்களுக்குப் பாதுகாப்பு அளித்தாலும் சரி, அளிக்காவிட்டாலுஞ் சரி நாங்கள்உரிமையை நிலைநாட்டுவோம். கடந்த வருடம் நாங்கள் உள்ளே சென்று வழிபட்டிருக்கிறோம். ஆதலால் இவ்வருடமும் நாங்கள் உள்ளே சென்றுதான் வழிபடுவோம். எமது வழிபாட்டு உரிமையை எவரும் தடுக்கமுடியாது. இதனுல் வரும் எந்தக் கஷ்டங்களையும் ஏற்கத் தயாராக இருக்றோம்.

பரிபாலன குழுவினர் ஆலயப்பிரவேசத்தை முறியடிக்க பலவழிகளைக் கையாண்டாலும், நாங்களும்ஆலயப் பிரவேசத்திற்கு புதிய வழிகளைக் கையாளுவோம்.

## ஆலயத்தை சூழவாழ்வோர் கலந்து கௌள்ள மாட்டார்களம்

யாழ்ப்பாணம், திங்கள்

மட்டுவில் அம்மன்கோவில் வடக்கு, தெற்கு பகுதியில் வாழும் சுமார் 100 சிறுபான்மை இன குடும்பங்கள் ஆலயப்பிரவேசத்தில் தாங்கள் கலந்துகொள்ளவில்லையென ஆலயப்பரிபாலன குழுவினரிடம்தெரிவித்திருப்பதாக கோவில் பணியாளர் குழுவைச் சேர்ந்த திரு. க. முத்துக்குமாரசாமி தெரிவித்தார்.

திரு. முத்துக்குமாரசாமி மேலும் கூறியதாவது:

ஆலயப்பிரவேசத்தில் கலந்துகொள்வதில்லையென்றும் வழக்கம்போல் நின்று வழிபட்ட இடத்திலிருந்து தாங்கள் வழிபடப்போவதாகவும் உற்சவத்தை சிறப்பாக நடத்த பரிபாலன குழுவினருக்கு உதவியளிப்போமென்றும், அம்மன்கோவிலை சுற்றியிருக்கும் சிறுபான்மை இனமக்கள் எழுத்துமூலம் தெரிவித்துள்ளனர்.

கோவில் பணியாளர் குழுவில் சுமார் 200 வாலிபர்கள் அடங்கியுள்ளனரென்றும் இவர்கள் கோயில் தொண்டுகளைச்செய்வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை, மாவிட்டபுரம், அச்சுவேலி போன்ற இடங்களிலிருந்து சுமார் 80 கோவில் பணியாளர் நேற்றுமாலை கோவிலுக்கு வந்து சேர்ந்தனர். இவர்களுக்கு கோவிலில் செய்யவேண்டிய பணிகள் பற்றி, ஆலய பரிபாலனகுழுவினர் தெரிவித்தனர்.

அம்மன் கோவிலுக்கு சென்று அங்குள்ள நிலைமையை நேரில்பார்வையிட்டார்.

எல்லாரும் வெளியில் பொங்கி அதே இடத்தில் படைக்க ஏற்ற ஒழுங்குகள் செய்யப் பட்டிருப்பதாகவும் பூசகர்களும், கோவில் பணியாளர்கள் மட்டுமே, கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்களென்றும் கோயில் பணியாளர்கள் பொலிஸ் அதிபரிடம் தெரிவித்தனர்.

பொலிஸ் அதிபர் நான்கு பக்கத்தையும் சுற்றிப் பார்வையிட்டார் நேற்றுக்காலை முதல் கோயில் பணியாட்கள் உற்சவத்திற்கு வேண்டிய ஒழுங்குகளை செய்தனர்.

கோவில் வீதிகளை துப்பரவு செய்வதிலும் பக்தர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதிலும், பரிபாலன குழுவினர் ஈடுபட்டிருந்தனர்.

## பாலில் கலப்பு: அபராதம்

யாழ்ப்பாணம். திங்கள்

பாலில் கலப்புச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கில் குற்றவாளியாகக்கண்ட இருவருக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் ஜனுப். ஜமீல் தலா 40 ரூபா அபராதம் விதித்தார். பி. செபஸ்தியாம்பிள்ளை, ரி. நடராசா ஆகியோருக்கே அபராதம் விதிக்கப்பட்டது.

கோப்பித்தூளில் கலப்படம் செய்ததாக வேலாயுதம் பரமானந்தம் என்பவருக்கு 40 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இவ்வழக்குகளை மாநகரசபை உணவுப் பரிசோதகர் திரு. செல்லப்பா முத்துக்குமாரு தாக்கல் செய்திருந்தார். கலப்படம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட 12 வழக்குகள் இன்னும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (ந நி)

## புதுடில்லியில் சேர் ஒலிவர்

புதுடில்லி, மார்ச். 16

முன்னுள் இலங்கை கவர்னர் ஜெனரல் சேர். ஒலிவர் குணத்திலக்கா இன்று புதுடில்லி வந்துசேர்ந்தார். உபஜனாதிபதி திரு. வி. வி.கிரியின் அழைப்பின் பேரில் இங்கு வந்துள்ள சேர். ஒலிவர், குடியரசுத் தலைவர் டாக்டர் சாகிஸ் ஹுசேனையும் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியையும் சந்திப்பார்.

# ஆலய வாசல்களில் பொலிஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம் திங்கள்

மட்டுவில் அம்மன்கோயில் வடக்கு, தெற்கு, மேற்கு வாசல்களில் பொலிஸார் கடமையாற்றுவார்களென்றும் கூட்டம் கூட்டமாக குழப்பம் செய்யும் நோக்கத்துடன் வருவோரை தடுத்து நிறுத்துவார்களென்றும் கூறப்படுகிறது. ஆலயப் பிரவேசத்தினுல் ஏற்படும் நிலைமையை அவதானித்து பொலிஸார் அதிகரிக்கப்படுவார்கள் என்றும் தெரியவருகிறது.

நேற்று மாலை 6மணிமுதல் பொலிஸார் ஆலயத்தில் கடமையாற்றுகிருர்கள். பொலிஸார் இன்றிரவு 10 மணி வரை கடமையாற்றுவார்கள். ஆலய உற்சவ விழா இன்றிரவு 8 மணிக்கு முடிவடைந்துவிடும் என்று பரிபாலன குழுவினர் தெரிவித்தனர்.

இம் மாதம் 17-ம் 24-ம 31-ம் தேதிகளிலும் ஏப்ரல் 7-ம் தேதியிலும் ஆலய உற்சவம் நடைபெறும் ஆலய கிணறுகளும், கேணியும் கோவில் மனேசர் திரு எம். குழந்தைவேலுவினுல் சுத்தமாக வைத்திருக்கப்படும்.

கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு திருவாளர்கள் எஸ். சிதம்பரப்பிள்ளை, கே.ஜெயதேவன், எம். குழந்தைவேலு எஸ். சிவகுரு கே. மயில்வாகனம் குடிநீர் வசதி செய்து கொடுப்பார்கள். குடி தண்ணீர் கொண்டுவருவதற்கு திரு எஸ். சுப்பிரமணியம் திரு எஸ்.சம்புநாதபிள்ளை ஆகியோர் தங்கள் டிராக்டர்களை இலவசமாக வழங்கியுள்ளார்கள்.

கமலாசனி வித்தியாசாலை மாணவர்களும், சந்திரமௌலீச வித்தியாசாலை மாணவர்களும், திரு. கே. இளையதம்பி தலைமையில், கேணியிலிருந்து பக்தர்களுக்கு தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மட்டுவில் வடக்கு, சரசாலை கிராம சேவகர்கள், இதற்கான ஒழுங்குகளை செய்துள்ளனர்.

கோவில் வீதிகளை துப்புரவாக வைத்திருக்கவும், பொங்கல் மண்டபத்தை சுத்தமாக வைத்திருக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. பக்தர்களின் வசதிக்காக 2 மலசல கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுகாதார பரிசோதகர் சுகாதாரம் சம்பந்தமான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளார்.

# ஆலயப்பிரவேசத்தில் நீதிமன்றத்தின்தீர்ப்பு என்ன?

## பரிபாலகர் தாக்கல் செய்துள்ள மனு

யாழ்ப்பாணம், திங்.

ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக கோர்ட்டின் தீர்ப்பை அறிவதற்கு, மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பரிபாலன குழுவைச் சேர்ந்த ஒருவர் நேற்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. வி. எம். குமாரசாமி முன்னிலையில் ஒரு மனுதாக்கல் செய்துள்ளார்.

பரிபாலன குழுவைச் சேர்ந்த மற்ற இருவர்களினதும் தலைவரினதும், கருத்தை அறிந்து தற்பொழுது எழுந்துள்ள நிலைமைக்கு வழிகாட்டும்படி அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

புறக்டர் எஸ்.கே. திரவியநாயகம், நேற்றுக்காலை இந்த மனுவை தாக்கல் செய்தார்.

கோர்ட்டு தீர்ப்பு வரும் வரை கோயில் பூட்டப்பட்டிருக்குமென்றும், எல்லாரும் வெளிவீதியில் பொங்கி படைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் மனுவை தாக்கல் செய்தவர் தெரிவித்தார்.

## அமரர் ஸ்ரீஸ்கந்தராசா

அராலி, ஞாயிறு

யாழ்ப்பாணக் கல்லூரியின் வரலாற்றில் மதிப்பிற்குரிய, என்றும் ஞாபகமூட்டக்கூடிய இடத்தைப் பதிவு செய்து சென்றவர்களுள் காலஞ்சென்ற நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசாவும் ஒருவர். இவர் இக்கல்லூரிப் பழைய மாணவர் சங்க முன்னுள் தலைவராகவும், பின்னர் நிர்வாகசபை உறுப்பினராகவும் இருந்தார். இக்கல்லூரியில் பயின்று வெளியேறும் மாணவர்களின் தகைமைக்கு அவர் ஓர் எடுத்துக்காட்டு.', இவ்வாறு அக்கல்லூரி அதிபர் திரு. எஸ். கதிர்காமத்தம்பி ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

3 வருடகாலத்துக்கு இன்சூரன்ஸ் கட்டிவந்தவர்களுக்கு வீடுகட்டுவதற்கு கடன் வழங்கும் திட்டமொன்றை இன்சூரன்ஸ் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்க முடிவுசெய்துள்ளது.

3 வருடம் தொடர்ந்து இன்சூரன்ஸ் கட்டியவர்கள் வீடுகட்டக் கடனுக்கு விண்ணப்பிக்கலாமென்றும், வீட்டுச் சொந்தக்காரர் இடைக காலத்தில் திடீரென இறந்துவிட்டால் வீட்டுக்கடன் திருப்பிச் செலுத்தவேண் கூறப்படுகிறது.

இன்று வர்த்தக மந்திரி வீடமைப்பு கடன் வழங்கும் திட்ட அறிக்கையைசமர்ப்பித்தார். காப்புறுதிக்கூட்டுத் தாபனம், வீட்டுக்கடனுக்கென 100 லட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளது. 1968-69-ம் ஆண்டுக் காலத்தில் 500 வாடிக்கையாளருக்கு வீடு கட்ட கடன் வழங்க அது தீர்மானித்துள்ளது. 5000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாவரை வீடு கட்டக் கடன் பெற முடியும்.

# சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடமாட்டேன்

## பாஷையூரில் அல்பிர துரையப்பா

யாழ்ப்பாணம், திங்கள்

'கடந்த பொதுத்தேர்தலின் போது வேறு அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து என்னை எதிர்த்த சிலர், இன்று என்னுடன் சேர்ந்து நிற்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இவர்கள் மற்றைய கட்சிகளில் நம்பிக்கை இழந்ததே காரணம். நான் இம்முறை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்துள்ளதாக அடிபடும் வதந்தியை மறுக்கின்றேன். இம்முறையும் நான் சுயேச்சையாளனுகவே போட்டியிடுவேன்.'

இவ்வாறு யாழ். மாநகர சபை அங்கத்தவர் திரு. அல்பிரட் துரையப்பா பாஷையூரில் நடைபெற்ற தேர்தல் ஆலோசனைக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினுர். திரு. எஸ். முத்துமணி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வருகிற பொதுத்தேர்தலில் திரு. துரையப்பாவை யாழ்ப்பாணத் தொகுதியில் நிறுத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

மாநகரசபை 2-ம் வட்டார அங்கத்தவர் திரு. பேரின்பநாயகம், திரு.தெய்வேந்திரம் ஆகியோரும் கூட்டத்தில் பேசினர்.

காரைநகர் கி. ச, தேர்தல்:

# இன்று நியமனம் இல்லை தேர்தல் பின்போடப்பட்டது

காரைநகர், திங்கள்

காரைநகர் கிராமசபைத் தேர்தல் ஒருவருடகாலத்திற்கு பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இன்று தாக்கல் செய்யப்படவிருந்தன.

இம்முறைத் தேர்தலில் 14 வட்டாரங்களுக்கும் அங்கத்தவர்களைப் போட்டியின்றித் தெரிவுசெய்து அனுப்புவதற்கு சைவமகாசபைத் தேர்தல் தெரிவுக்குழு தீர்மானித்து, அபேட்சகர்களை தயார் செய்து இருந்தது. கடைசி வேளையில் தேர்தல் பின்போடப்பட்டதால் இப்பகுதி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். இது சம்பந்தமாக உள்ளூர் ஆட்சி அமைச்சரைச் சந்திப்பதற்கும் ஆட்சேபனைக் கூட்டங்களை நடத்தவும் காரைநகர் சர்வோதய இயக்கம் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

## கி. பாகிஸ்தானுக்கு துருப்புகள்

கராச்சி, மார்ச். 16

கிழக்கு பாகிஸ்தானில் கிளர்ச்சிகளை அடக்குவதற்காக மேற்கு பாகிஸ்தானிலிருந்து துருப்புகள் கிழக்கு பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுகின்றன. கராச்சியிலிருந்து முதல் கோஷ்டி சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

## வார்ஸோ நாடுகள் கூடுகின்றன

மாஸ்கோ, மார்ச். 16

நாளை புடாபெஸ்டில் ஆரம்பமாகும் வார்ஸோ ஒப்பந்த நாடுகளின் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக சோவியத்பிரதிநிதிகள் கோஷ்டி செல்லுகிறது. சோவியத்-சீன எல்லைப் பிரச்னைமுக்கிய பிரச்னையாக விவாதிக்கப்படுமெனத்தெரிகிறது.

கைக் கூடுதல் விலை கொடுத்து வாங்கி விதைத்த விவசாயிகள் உருளைக் கிழங்கின் விலை தற்போது குறைந்துள்ளதால் அவற்றை விற்க முடியாது தடுமாறிக் கொண்டிருக்கின்றனர்.

இதனுல் அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் இதுபற்றி எதுவித அக்கறையும் எடுக்க வில்லையென்றும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இவ்வருடம் உருளைக் கிழங்கு பயிரிடுவதை நிறுத்தவும் விவசாயிகள் ஆலோசிக்கின்றனராம்.

## இன்சுலின் தட்டுப்பாடு

சுழிபுரம், ஞாயிறு

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் தினமும் இன்சுலின் ஊசிபோடவரும் நோயாளர்கள் குறிப்பிட்ட மருந்து அங்கில்லாததால் அவதிப்படுகின்றனர். வைத்தியசாலையில் இன்சுலின்ஊசி மருந்துக்கு ஏற்பட்டுள்ளதட்டுப்பாடு குறித்து வைத்தியசாலை அதிகாரியால் சுகாதாரப் பகுதியினருக்கு ஓர் அவசரத்தந்தி அனுப்பப்பட்டுள்ளது.

## மத்திய பஸ் நிலையம்

கண்டி, ஞாயிறு

கண்டிநகரின் அதிமுக்கிய தேவைகளிலொன்ருன மத்திய பஸ் நிலையத்திற்கான வேலைகள் இம்மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப் பட்டன. சுமார் ஒரு வருடத்திற்கு முனனதாகவே ஆரம்பிக்கப்படவிருந்த இந்தபஸ் நிலையத்திற்கான வேலைகள் 16 குடும்பங்களின் தலையீடு காரணமாகத் தாமதிக்கப்பட்டிருந்தது.

பிரஸ்தாப 16 குடும்பங்களையும் சேர்ந்த சுமார் 90 பேர்கள் மத்தியபஸ்நிலையத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதியிலிருந்துவெளியேற மறுத்ததோடு தங்கள் வசிப்பிடங்களுக்கு மாநகரசபை வசதிசெய்து தர வேண்டுமெனவும் மாநகரசபையிடம் கோரியிருந்தனர்! மாநகரசபை இவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாமல்குறிப்பிட்ட குடும்பத்தினரை வெளியேற்ற இ. போ. சபையினருக்கு அதிகாரமளித்ததைத் தொடர்ந்து 16குடும்பங்களும் வெளியேற்றப்பட்டன.

## ராக்கட் தாக்குதல்

லண்டன், மார்ச். 16

ஜோர்டான் பள்ளத்தாக்கில் மீண்டும் இன்று ராக்கெட் தாக்குதலை இஸ்ரேல் நடாத்தியது. இந்தத்தாக்குதல் சில ஒருமணி நீடித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிசாரத்தைக்கொண்டு, காதல் பிரச்னைகள் 3 நாட்களில் பரிபூரணமாகத் தீர்த்து வைக்கப்படும். இருவர் பெயர்களையும் எழுத இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். நீலன் கந்தசாமி. குப்தி வித்யாதணய, நிட்டம்புவ. 762

### விற்பனைக்கு

மிகச் சிறந்த நிலையில் உள்ள 2 ஸ்ரீ 6000 இலக்கத் தொடருள்ள A 40 பரீனு (Farina) கார் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு A அம்பலவாணர் மனேஜர் கூட்டுறவு வங்கி, சுன்னுகம். அல்லது 38, கல்லூரி வீதி, நீராவியடி. 765

கார்

தனிப்பாவிப்பிலுள்ள EY 9000 தொடர்பிலக்கமுள்ளசோமசெட் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நாட்கள் பிறீப்போயா, போயா. No. 21 செட்டித் தெரு, நல்லூர். 768


### தேவை

பியோன் தேவை: நற்சாட்சிப்பத்திரங்களோடு விண்ணப்பிக்கவும். ராமகிருஷ்ணுஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 771

### For Sale

Land Thirty Perches. Chundikuli off Colombogam Road. Rs. 13,500 -. Dr. Ratnam, 11, Rama krishna Gardens Wellawatte. 774

REGAL at Jaffna
Daily 4 Shows
Viginia Mckenna,
Bill Fravers
in
BORN FREE
(color)

சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தாரால் நடத்தப்பட்ட யானை மார்க் சோடா போத்தல் மூடி போட்டியில் 5வது பரிசு பெற்ற கண்டி அர்ச். சில்வெஸ்டர் கல்லூரி மாணவன் ஏ. பர்தலோமியஸ் தமக்களிக்கப்பட்ட 200 ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களுக்கான பத்திரத்தை தமது கல்லூரி அதிபரிடம் கையளிப்பதை இப்படத்தில் காணலாம்.

கொட்டாஞ்சேனை மத்திய மகாவித்தியாலய அதிபரும், மொறட்டுவை பிரின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரி அதிபரும் வேறு இரு பரிசுத்தொகைகளுக்குரிய பத்திரங்களைப் பெற்றனர்.


63வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
ஒளி விளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்.
நாகேஸ்வரராவ்-சாவித்திரி நடித்த
தேவதாஸ் (புதிய கொப்பி)

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹற்றன்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
எஸ். வி. ரங்கராவ், பானுமதி
முத்துராமன், பாரதி, ஏ. வி. எம். ராஜன்,
நாகேஷ் நடித்த
வாசு பிலிம்ஸ் அளிக்கும்
பூவும் பொட்டும்


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (17-3-69)

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ அன் 49 மீ.

பகல் 12 00 தொழிலாளர்வேளை, 1-00 இளைஞர் மன்றம்.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 நேயர்விருப்பம், 6 45 புதுமொழி படைப்போம், 6-55 வாத்தியஇசை, 7-00 கிராம சஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9-30 உரைச்சித்திரம், 10 00தேர்ந்தஇசை.

## பதில் ராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஞாயிறு இந்தியாவுக்குச் சென்ற ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும்

## இன்றைய பலன்

(17-3-69).

பங்குனி மாதம், 4 வ

திங்கட்கிழமை

திதி- சதுர்த்தசி பகல் 11-57 மேல் அமாவாசை.

நட்சத்திரம்- சதயம் பகல் 9-49 மேல் பூரட்டாதி.


ராகுகாலம்- 7-50 - 9-20.

சுபநேரம்- 12-20 — 1-50

இன்று பிறந்தவர்களுக்கு தனியார் துறையில் தொழில்புரிவோர்க்குரிய நல்லாண்டாகும். பாடகர்களுக்கு பரவசம், பள்ளிப் பிள்ளைகளுக்கு கல்வியில் நலன் தரும் ஆண்டு. எண்கணித மேதைகளுக்கு எதிர்பாராத நன்மைகளும் உண்டாம்.

மேஷம்- எதையும் தாங்கும் இதயம்வேண்டும்.

ரிஷபம்- அன்னைமொழி அமிர்தம் அமைதியுடன் இரு.



மத்திய கல்லூரி காப்டனுடன் இவரது உதவி காப்டனும் சென்றவருட காப்டனும் இங்கே காணப்படுகிருர்கள். இம்முறை பந்து வீசுவதில் புதிய முறையை கையாளுவது பற்றி இவர்கள் ஆலோசிக்கிருர்கள்.

(படப்பிடிப்பு: 'சிட்டு')

சென்றல் - சென். ஜோன்ஸ்

# இன்று ஆரம்பமாகும் கிரிக்கெட் போட்டி


யாழ்ப்பாணம், திங்கள் யாழ். மத்திய கல்லூரி சென். ஜோன்ஸ் கல்லூரியின் 71-வது மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இன்றும், நாளையும் இப்போட்டி காலை 10-30-க்கு ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு முடிவடையும். இப் போட்டிக்கு கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கக் காரியதரிசி திரு. சற். சிங்கராயரும், திரு. தியாகராசாவும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றுவார்கள்.

இம்முறை இப்போட்டியை கண்டு களிக்க கூடுதலான பார்வையாளர்கள் வரக்கூடும் என எதிர்பார்ப்பதால், மைதானத்தினுள் 'வெடிகள்' கொழுத்தக் கூடாது என இரு கல்லூரி மாணவர்களுக்கும் அக் கல்லூரி அதிபர்கள் பொலிசாரின் உத்தரவைத் தொடர்ந்து அறிவித்துள்ளார்கள். பார்வையாளர்களையும், மாணவர்களையும் கட்டுப்படுத்துவதற்காக, இம்முறை பலத்த பொலிஸ் பந்தோபஸ்துகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய கல்லூரிக்கு முன் உள்ள வீதியும், 'சுப்பிரமணியம் பாக்' பின் வீதியும் இவ் விருநாட்களும் மூடப்பட்டிருக்கும். (தே. நி)



சென். ஜோன்ஸ் கல்லூரியின் காப்டன் சுரேந்திரா பந்துவீசும் ஒரு கட்டம்.



மத்திய கல்லூரியின் காப்டன் புரட்சிதாசன் துடுப்பெடுத்தாடும் ஒரு கட்டம்.

உரும்பராய்

## சைவவித்தியாசாலை

| சென். ஜோன்ஸ் | 1-வது இன். | 2-வது இன். |
|---|---|---|
| சிவக்குமார் | | |
| செல்வநாயகம் | | |
| சிவபாலன் | | |
| நவரட்ணராசா | | |
| சுரேந்திரா | | |
| மில்ஸ் | | |
| தெய்வேந்திரன் | | |
| ஜெயரட்ணம் | | |
| செல்வநாயகம் | | |
| கூல் | | |
| ஒஸ்ரின் | | |
| மொத்த ஓட்டங்கள் | | |
| மத்தியகல்லூரி பந்து வீச்சு | | |
| ஜெயரட்ணகுமார் | | |
| தில்லையம்பலம் | | |
| சாந்திகரன் | | |
| ரஞ்சித்குமார் | | |
| புரட்சிதாசன் | | |

| மத்திய கல்லூரி | 1-வது இன். | 2-வது இன். |
|---|---|---|
| ஜெயரட்ணகுமார் | | |
| அபூபக்கர் | | |
| தயாசிங்கம் | | |
| சாந்திகரன் | | |
| பாலேந்திரன் | | |
| புரட்சிதாசன் | | |
| விஞேகரன் | | |
| ரஞ்சித்குமார் | | |
| தில்லையம்பலம் | | |
| ராஜசிங்கம் | | |
| தங்கேஸ்வரன் | | |
| மொத்த ஓட்டங்கள் | | |
| சென். ஜோன்ஸ் பந்துவீச்சு | | |
| மில்ஸ் | | |
| சுரேந்திரா | | |
| சிவபாலன் | | |
| ஜெயரட்ணம் | | |
| நவரட்ணராசா | | |

அரியாலை 'சுதேசிய விழா'

## உதைபந்தாட்ட போட்டிமுடிவுகள்

யாழ்ப்பாணம், திங். அரியாலை சுதேசிய விழா' வை முன்னிட்டு யாழ் விளையாட்டரங்கில் நடாத்தப்பட்டு வரும் ''நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் சில பின் வருமாறு:-

## அரியாலை

அரியாலை விளையாட்டுக் கழகத்திற்கும், 'யாழ்றேஞ்சஸ்' விளையாட்டுக் கழகத்திற்குமிடையில்நடைபெற்ற போட்டியில் அரியாலைக் கோஷ்டி 6-1 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. செபஸ்தியாம்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## வை. எம். ஜி.

யாழ். பொலிஸ் கோஷ்டிக்கும், வை. எம். ஜி. கோஷ்டிக்குமிடையில்நடைபெற்ற போட்டியில் வை. எம். ஜி. கோஷ்டி 3-2 கோல்களால்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(திருமலை) (ஹற்றன்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
எஸ். வி. ரங்கராவ், பானுமதி
முத்துராமன், பாரதி, ஏ. வி. எம். ராஜன்,
நாகேஷ் நடித்த
வாசு பிலிம்ஸ் அளிக்கும்

# பூவும் பொட்டும்

டைரக்ஷன்: தாதாமிராசி

இங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்)



சிவாஜி, விஜயா,
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின்

## ஊட்டிவரை உறவு

(ஈஸ்ட்மென் கலர்)

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
எஸ். எஸ். வாசன் அவர்களால்
ஈஸ்ட்மன் கலரில் படமாக்கப் பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு
கோலாகல காட்சியையும்
மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா
ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்று
வதையும் பார்க்கலாம்!

பதில் ராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஞாயிறு
இந்தியாவுக்குச் சென்ற ராஜாங்க அமைச்சர் திரு ஜே. ஆர். ஜயவர்த்தன இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் வரை அவரது கடமைகளைச் செய்வதற்கு உதவிராஜாங்க அமைச்சர் திரு. டி. பி. அத்தபத்து பதில் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர்.
கே. ஆர். விஜயா
நடித்த
தொழிலாளி

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா

MANOHARA
JAFFNA
Daily 6-30, 9-30 p.m.
Pre-Poya, Poya 2-30 p. m.
Azad Shakila
in
TARZAN AND THE
WONDERFUL LAMP
(Hindi)

மேதைகளுக்கு எதிர்பாராத நன்மைகளும் உண்டாம்.

மேஷம்- எதையும் தாங்கும் இதயம்வேண்டும்.
ரிஷபம்- அன்னைமொழி அமிர்தம் அமைதியுடன் இரு.
மிதுனம்- மனையாட்சி மலரும், மதிப்பும் உண்டு.
கடகம்- இன்னலின் தாக்குதல் இதயத்தில் தீ.
சிம்மம்- சுற்றம்வாழ்த்தும் சுகம் உண்டு.
கன்னி- சிநேகிதபாசம், சந்தோஷம் தவிர்.
துலாம்- தனக்குறைவு தள்ளாடும் நிலை.
விருச்சிகம்- தொழில் கவலை தொல்லையைத் தவிர்.
தனுசு- நம்பிக்கை பலிதம், நலனும் சேரும்.
மகரம்- கடன்படநேரிடும் கவலையும் உண்டு.
கும்பம்- குசுகுசுத் திட்டம், குலைந்துவிடும் அமைதி.
மீனம்- குற்றாலம்அருவி போல் வற்றாத இன்பம்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

சென். ஜோன்ஸ் கல்லூரியின் காப்டன் சுரேந்திரா பந்துவீசும் ஒரு கட்டம்.

மத்திய கல்லூரியின் காப்டன் புரட்சிதாசன் துடுப்பெடுத்தாடும் ஒரு கட்டம்.

உரும்பராய்

# சைவவித்தியாசாலை
# முதல் 3 பரிசுகளைப் பெற்றது
## கோப்பாய்வட்டாரப்போட்டிமுடிவுகள்

உரும்பராய், ஞாயிறு
கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளுக்கான தேகப் பயிற்சிப் போட்டியில் 'பி' பிரிவு ஆண்கள் பகுதியில் சிரேட்ட, மத்திய, கனிட்ட ஆகிய மூன்று பிரிவுகளிலும் முதல் மூன்று இடத்தையும் உரும்பராய் சைவ தமிழ் வித்தியாசாலை மாணவர்கள் சுவீகரித்துக் கொண்டனர். மத்திய கனிட்ட பிரிவுகளில்இரண்டாம்இடங்களைகோப்பாய் சரவணபவானந்தவித்தியா சாலைமாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் ''பி'' பிரிவு பெண்கள் பகுதியில் மூன்றுபகுதிகளிலும் முதல் மூன்று இடத்தையும் அச்சுவேலி புனிததிரேசா பாடசாலையும் இரண்டாம் இடங்கள் மூன்றையும் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் பெற்றுக் கொண்டன.

''ஏ'' தொகுதியில் ஆண்கள் பெண்கள் பகுதியில் உரும்பராய் இந்துக்கல்லூரி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், அச்சுவேலி கிறிஸ்தவக்கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தகல்லூரி, கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரி உட்பட பலபாடசாலைகள் கலந்து கொண்டன.

பெறுபேறுகள் பின்வருமாறு:

**கனிஷ்டபிரிவு**

ஆண்கள்:- 1. அத்தியார் இந்துக்கல்லூரி -நீர்வேலி. 2. இந்துக்கல்லூரி -உரும்பராய். 3. கிறிஸ்தவக் கல்லூரி -அச்சுவேலி.

பெண்கள்:- 1. அத்தியார் இந்துக் கல்லூரி -நீர்வேலி.

**மத்தியபிரிவு:**

ஆண்கள்:-1. உரும்பராய் இந்துக கல்லூரி. 2. வசாவிளான்மத்திய மகா வித்தியாலயம்.
3. நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

பெண்கள்:- 1. உரும்பராய்இந்துக் கல்லூரி ,கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. 2 கோப்பாய் மகாவித்தியாலயம்.

**மேற்பிரிவு:**

1. புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி.

கோப்பாய் வட்டார வித்தியாதிகாரி திரு. வே. சண்முகநாதன் உடற்பயிற்சிவித்தியாதிகாரி திரு. ஆர். எஸ். சீவரத்தினம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் திரு. கே. சண்முகநாதன் ஆகியோர்கள் போட்டியாளர்களைப் பாராட்டிப்பேசினார்கள்.

பட்டு வரும் ''நொக்கவுட்'' உதைபந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் சில பின்வருமாறு:-

ஸ்தியாம்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## வை. எம். ஜி.

யாழ். பொலிஸ் கோஷ்டிக்கும், வை. எம். ஜி. கோஷ்டிக்குமிடையில்நடைபெற்ற போட்டியில் வை. எம். ஜி. கோஷ்டி 3-2 கோல்களால் வென்றது.

இப்போட்டிக்கு திரு. இம்மனுவேல் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே. நி)

கிளிநொச்சி வட்டார

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்
கிளிநொச்சி வட்டாரக் கனிஷ்ட பாடசாலைகளின் சுவட்டு மைதான மெய்வல்லுநர்ப் போட்டிகள் நேற்றும் நேற்று முன்தினமும் கிளிநொச்சி றெட். றிக்கோ மைதானத்தில் நடைபெற்றது. தொகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். திரு. நா. துரைசாமி தலைமை தாங்கினார் போட்டிகளில் 18பாடசாலைகள் கலந்து கொண்டன.

இப்பொழுது
திரையிடப்படுகிறது!
யாழ். வின்ஸர்
திரையில்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன், ராஜ்ஸ்ரீ
நாகேஷ், மனோரமா,
சுந்தரராஜன்,
ஜெயபாரதி
நடித்த



## அனுபவி
ராஜா
## அனுபவி

★ பூட்டுக்கள்
★ பிணைச்சல்கள்
சகலவித
பொருட்களும்

ஸ்டீல்சன்ஸ் ஸ்தாபனத்தார்
விநியோகம் செய்கிறார்கள்

யானை மார்க்
அஸ்பெஸ்டர்ஸ்
கூரைத் தகடுகள்

திறமை வாய்ந்த
பித்தளைப் பூட்டுக்கள்
பிணைச்சல்கள்
தயாரிப்பாளர்:-
பிறின்ஸ் பிறஸ் பக்டறி
கெலனியா.

'குரங்கு' மார்க்
தென்னுபிரிக்காவில்
தயாரிக்கப்பெற்ற
''ஸ்பிரிட்''

குறைந்தவிலையில்
சிறந்தபொருட்கள்

சினேசம்
இன்னும்
திறமைவாய்ந்த
பெயின்ற் வகைகள்

# ஸ்டீல்சன்ஸ்

287-289 ஸ்ரான்லி வீதி, (தொலைபேசி: 7035) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன - சோவியத் எல்லையில் மீண்டும் கடும் போர்

## இருதரப்பும் பரஸ்பரம் குற்றச்சாட்டு

ஹொங்கொங், மார்ச் 16

சீன—சோவியத் எல்லையில் மீண்டும் பலத்த மோதல் ஏற்பட்டு, இரு நாடுகளும் ஒன்றையொன்று குற்றஞ்சாட்டியுள்ளன. ஆயிரக் கணக்கான சீனப் படையினர் எல்லையை மீறி வந்து தமது காவல் படையினர் மீது சுட்டதாகவும், அவர்களைத் துரத்தியடித்ததாகவும் சோவியத் யூனியன் கூறியுள்ளது.



ரஷ்யர்கள்தான் எல்லையை மீறி வந்து சீனக் காவலர் மீது தாக்குதல் நடத்தியதாகச் சீன குற்றஞ்சாட்டியுள்ளது.

சோவியத் காபரோஸ்க் நகருக்குச் சுமார் 110 மைலிலுள்ள டமான்ஸிக்கி தீவு குறித்து இரு நாடுகளுக்குமிடையில் தகராறு ஏற்பட்டிருக்கின்றது. இந்த எல்லையில் இம்மாதம் 2ந் திகதி முதல் தடவையாக இருதரப்பு எல்லைக் காவலர்களுக்குமிடையில் சண்டை மூண்டது. அதன் பிறகு கடந்த வெள்ளியன்றும், நேற்றும் கடுமையான சண்டை ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது. இந்தத் தீவுக்குச் சின்-பாஓ-டாஓ என்று சீனர் பெயரிட்டு அழைக்கின்றனர்.

### சீனக் குற்றச்சாட்டு

ரஷ்யர்கள் பெரிய பலத்துடன் டாங்கிகளுடன் வந்து சுட்டதாகச் சீனர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஆனல் சுமார் ஆயிரம் சீனக் காவல் படையினர் எல்லையை மீறி வந்து தமது படைகளைத் தாக்கியுள்ளதாகவும், அவர்களைத் திருப்பி அடித்துத்



துரத்தியதாகவும் ரஷ்யர் கூறுகின்றனர். இதில் சுமார் ஆயிரம் சீனக் காவல் படையினர் கலந்துகொண்டனராம். முன்னர் விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளைச் சீனர் புறக்கணித்துள்ளனர் என்றும் ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

# சொந்த சவக்குழியை ரஷ்யா தோண்டுகிறதாம்

## சீனப்பத்திரிகை விமாசனம்

பூகிங், மார்ச் 16

"சீனவை வெறித்தனமாக எதிர்ப்பதில் அதனுடைய சொந்த சவக்குழியை மாத்திரம்தான் சோவியத் திரிபுவாத துரோகக் கும்பலின்...

...தனமான ஆத்திரமூட்டல் செயல்களைச் செய்வதற்கு திரிபுவாதத் துரோகக் கும்பலின் ஒரு ராணுவ மேஜர் ஜெனரலின் நேரடிக்கட்டளையின்...

...மாஓ அவர்களை இந்த வெறித்தனமான காடையர் கோஷ்டி படுகேவலமாக தூசிக்குமளவிற்கு சென்றதாகும். 70 கோடி சீன மக்...

# தலைமறைவு நாகர் தலைவர் பிடிபட்டார்

## சீனவில் பயிற்சி பெற்றவராம்

புதுடில்லி, மார்ச் 16

சீனவில் பயிற்சி பெற்றவரான தலைமறைவு நாகர் தலைவர் ஜெனரல் மல் அல்காமி என்பவர் இந்தியபாதுகாப்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொஹிமாவுக்கு வடகிழக்கில் காட்டுப் பகுதியில் இவர் கைது செய்யப்பட்டார். மார்ச் மாதம் 6-ம் திகதி சீனப் பகுதியிலிருந்து பயிற்சி பெற்ற நாகர் ஒரு இந்தியப் பகுதிக்குள் நுழைந்தார். அதன்பிறகு ஜெனரல்அல்காமியும்பலரும் வந்துள்ளனர். ஜெனரல்அல்காமியின் நடவடிக்கைகள் கவனிக்கப்பட்டு வந்தது. நேற்றிரவு ஜெனரல் அல்காமி ஒரு முகாமிலிருந்து இன்னெரு முகாமுக்குப் போய்க் கொண்டிருந்த பொழுது கைது செய்யப்பட்டார். அவருடன் மற்றும்பலரும் ஏராளமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக தெரிகின்றன.

# கிருபானந்தவாரியார் படத்தில் நடிக்கிருர்

சென்னை, மார்ச் 16

திருமுருக கிருபானந்த வாரியார் தமிழ்த் திரைப் படத்தில் நடிக்கிருர். முருக பக்தியை அடிப்படையாக வைத்து எடுக்கப்படும் 'துணைவன்' என்ற படத்தில் பக்தன் ஒருவனுக்கு உபதேசம் வழங்குபவராக வாரியார் தோன்றுகிருர். இவருக்கு அடியாராக சின்னப்ப தேவர் நடிக்கிருர்.

வாரியாரும், ஏ. வி. எம். ராஜன், சின்னப்ப தேவர் முதலியோர் நடித்த காட்சி அண்மையில் படமாக்கப்பட்டது.

எம். ஏ. திருமுகம் டைரக்ட் செய்யும் இப் படத்தில் சௌகார்ஜானகி கதாநாயகியாக நடிக்கிருர்.

# அப்போலோ—9 கலம் நிகழ்த்திய சாதனைகள்

வாஷிங்டன். மார்ச். 16

விண்வெளியில் அற்புத சாதனைகள் நடத்திவிட்டு பூமிக்குத் திரும்பிய அப்பல்லோ-9 கலத்தின் முக்கிய சாதனைகள் பின் வருமாறு. விண்வெளி பயணகட்டுப்பாட்டு நிலையம் இதனை வெளியிட்டுள்ளது.

முதன்முறையாக விண்வெளி வீரர்கள் ஒருகோளிலிருந்து ஆட்களற்ற வேறோர் கப்பலுக்கு தாவியது.

வெளியே தாவாமல் ஒரு கப்பலிலிருந்து அதனூடாகவே மற்றோர் கப்பலுக்குள் பிரவேசித்தது.

...பட்டது- ஆணைப்பகுதி, நிலவுவாகனம் ஆகிய இரண்டும் கொண்டிருந்தது.

ஒரு கப்பலிலிருந்த மற்றோர் கப்பல் மனிதருடன் பிரிந்து பலமைல் தூரம் சென்று பின்னர் மீண்டும் ஒன்ருக இணைந்தது. 1964ம் 1966ம் ஆண்டுகளில் இத்தகைய பயிற்சிகள் ஆட்களற்ற வாகனங்களைக் கொண்டு பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

வானிலிருந்தே பூமியின் பயிர் வளத்தை ஆராய முயற்சிகள் எடுக்கப்பட்டன இதற்கான விசேட காமிரா ஒன்றும் பயன்படுத்தப் பட்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிட்டோ மீண்டும் தலைவர்

புடாபெஸ்ட், மார்ச் 16

யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக மார்ஷல் டிட்டோ மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருக்கிருர். மார்ஷல் டிட்டோவுக்கு 77 வயதாகின்றது. வாக்களிப்பு இரகசியமாக நடைபெற்றது. ஒரு வாக்கு அவருக்கு எதிராகப் பதிவாகியிருந்தது. இரண்டு செல்லுபடியாகவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டின் இறுதியில் பேசுகையில், சர்வதேச நெருக்கடி நிலைமை இன்று என்றையும்விட மிக மோசமான கட்டத்தை அடைந்திருக்கிறது என்ருர்.

# இனி தாமதம் இருக்காது

வெள்ளவத்தை, ஞாயிறு

இலங்கை மாணவர்கள் இனிமேல்தங்களுடையபரீட்சைப் பெறுபேறுகளையும், அவற்றுக்கான அத்தாட்சிப் பத்திரங்களையும் கூடியவிரைவில் பெற்றுக்கொள்ளலாம். இலங்கை கல்வி திணைக்களத்தினர் ஸ்டேட் என்ஜினியரிங் கார்ப்பரேசன் நிறுவனத்தாரின் உதவியுடன் புதுவகை இயந்திரமொன்றைத் தருவித்துள்ளனர், இந்த இயந்திரத்தின் உதவியினுல்ஆறு மாத காலத்துள் பரீட்சையில் சித்தியடைந்த பத்திரங்களை வழங்கமுடியும் என்றும் பரீட்சை முடிவுகளை மூன்றுமாதத்துக்குள் மாணவர்களுக்குத் தெரிவிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனல் நாடுபூராவிலுமுள்ளபல்லாயிரக்கணக்கான ஜி, சி. ஈ. சாதாரண) பரீட்சாத்திகளே பெரிதும் பயனடைவர். இம்முறை வெற்றியளிக்குமாளுல் தொடர்ந்தும் பல இயந்திரங்களை இறக்குமதி செய்வதென கல்வி இலாகா தீர்மானித்துள்ளது.

# சிரமதானமூலம் வகுப்பறைகள்

# 10 ஆயிரம் ஆசிரியர்கள் கேரளத்தில் ஆர்ப்பாட்டம்

## பொலிஸ் தாக்குதலில் 54 பேருக்கு காயம்

திருவனந்தபுரம், மார்ச் 16

கேரளத்தில் அரசாங்க செயலகத்தின்முன் ஆர்ப்பாட்டம் நடத்திய சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்களை பொலிஸ் தடிகளால் அடித்துக்கலைத்தார்கள். இதில் 54 ஆசிரியர்களுக்கு காயம் ஏற்பட்டது. 14 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இருவக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமைகள், கிராக்கிப்படி, பதவிஉயர்வு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்ப ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம்பேர் சட்டசபைக்கு அருகிலுள்ள அரசாங்க செயலகத்தைச் சுற்றி மறியல் செய்தார்கள். மறியல் செய்தவர்களை அப்புறப்படுத்த பொலிசார் முயற்சி எடுத்தபொழுது மற்றவர்கள் தடுத்தனர் அதைத் தொடர்ந்து பொலிசார் தடிகளை வீசி அவர்களைக்கலைத்தனர். இதில் பலர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து ஆசிரியர்கள் திருவனந்தபுரம் தெருக்கள் வழியாகப்பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்திஞர்கள். பிறகு நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் திங்கட்கிழமையன்று பொதுவேலை நிறுத்தம் நடத்துவதென அவர்கள் முடிவு செய்தனர்.

# வைத்தியகோஷ்டி கமிஷனரை சந்திக்கும்

அல்லைப்பிட்டி, ஞாயிறு

இம் மாதம் 20-ம் திகதி முகாந்திரம் ஈ. பி. இராசையா ஜே.பி. தலைமையில் ஓர் வைத்தியத் தூது கோஷ்டியொன்று ஆயுள்வேத கமிஷனரை சந்தித்து யாழ்ப்பாணம் ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியில்கற்கும் மாணவர்களது பரீட்சை விஷயமாகவும் இன்றைய நிலைபற்றியும் பேசவுள்ளனர். இக் கோஷ்டியினர் 21ந் திகதி இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் நாவின்னை ஆயுள்வேத ஆராய்ச்சிச் சாலை ஆய்வாளர் டாக்டர் ஆர். ஆர். பட்டாக்கின் பிரிவுபசார வைபவத்திலும் கலந்து கொள்வார்கள்.

# புதிய தபால் நிலையம்

முல்லைத்திவு, ஞாயிறு

இரண்டரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் முல்லைத்திவு தபால் நிலையத்திற்கான அடிக்கல்லை முல்லைத்திவு பட்டினசபைத் தலைவர் திரு. ம. சூ. வஸ்தியாம்பிள்ளை நாட்டிவைத்தார். வவனியா எம். பி. திரு. சிவசிதம்பரமும் கலந்துகொண்ட இவ் விழாவில் பட்டினசபைத் தலைவர் பேசுகையில், திரு. சிவசிதம்பரம் எம். பி. யின் முயற்சியினுல் கிடைக்கப்பெற்ற தபால் நிலையம், இதுவரை இருந்துவந்த கஷ்டங்களை நீக்கும் என்று கூறிஞர் திரு. சு. வெ. அருளப்பு ஜே. பி. குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

# அண்ணு அஞ்சலி

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் சூரியோதய சனசமூக நிலையத்தார், மேற்படி நிலையத் தலைவர் திரு. கே. செல்லையா தலைமையில் கூடி அமரர் அண்ணுவுக்கு அஞ்சலிசெலுத்தினர். கூட்ட ஆரம்பத்தில் அண்ணுவுக்கு இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது,

# ஜி. ஸி. ஈ. உயர்தர பரீட்சை

வெள்ளவத்தை, ஞாயிறு

இலங்கை கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர) பரீட்சை ஏப்ரல் மாதம் 18-ம்திகதிமுதல் மே மாதம் 6-ம் திகதிவரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழரில் ஒருவரே சித்தி

வெள்ளவத்தை, ஞாயிறு

தபாற் தந்தித் திணைக்களத்தின் இரண்டாந்தர எழுதுவினைஞர் பதவி உயர்வுப்பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. இதில் தோற்றிய தமிழ் அரசாங்க ஊழியர்களில் தலைமை அஞ்சல் அதிபதி கட்டிடத்தைச் சேர்ந்த திரு. துரைராஜா என்ற ஒருவரே தமிழ் மொழிமூலம் சித்தியடைந்துள்ளார். இதுபற்றிஅஞ்சல் எழுது வினைஞர் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

# சீனப்பத்திரிகை விமர்சனம்

பீகிங், மார்ச் 16

"சீனாவை வெறித்தனமாக எதிர்ப்பதில் அதனுடைய சொந்த சவக்குழியை மாத்திரம்தான் சோவியத் திரிபுவாத துரோகக் கும்பலினால் வெட்டமுடியும்" என்ற தலைப்பிட்டு விமர்சகரால் எழுதப்பட்ட ஒரு கட்டுரையை பீகிங் 'மக்கள் தினசரி, பிரசுரித்துள்ளது.

சீன பிரதேசத்திற்கும் ஊடுருவல் செய்வதற்கு தனது ராணுவ படைகளை அனுப், மார்ச் 2-ல் ஒரு எல்லையற்ற பாரதூரமான ரத்தக்களரி எல்லைச் சம்பவத்தை உண்டுபண்ணிய பின்பு, பிரஷ்ணேவ், கொசிஜின் ஆகியவர்களால் தலைமைதாங்கப்பட்ட சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் நச்சுத்தனமான சீன எதிர்ப்பு அலைகளைக் கிளப்புவதற்கு மேலும் ஒரு படி சென்றுவிட்டது: மாஸ்கோவிலுள்ள சீன ஸ்தானீகராலயத்திற்கு முன்னால் வெறித்தனமான ஆத்திரமூட்டல் செயல்களைச் செய்வதற்கு திரிபுவாதத் துரோகக் கும்பலின் ஒரு ராணுவ மேஜர் ஜெனரலின் நேரடிக்கட்டளையின்கீழ்அடுத்தடுத்து பெரும் தொகையான காடையர்களை சோவியத் திரிபுவாத அதிகாரிகள் மார்ச் 7-ம், 8-ம் திகதிகளில் அணிதிரட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த காடையர்கள் சீன ஸ்தானிகராலயத்தின் கட்டடங்களை நாசப்படுத்தி ஸ்தானிகராலயத்தின் செய்திப் படங்கள் வைக்கும் கண்ணாடிப்பெட்டியை கற்களாலும இரும்புப்பொருட்களாலும், எறிந்து நொறுக்கி, சீன ஸ்தானிகராலய அதிகாரிகள் மீது வாயு அமுக்கிய துப்பாக்கிகளால் சுட்டனர். இது முற்றுமுழுதாக ஒரு பாசிஸச் செயலாகும். இன்னும் பெரும் ஆத்திரமூட்டக்கூடிய செயல் என்னவென்றால். சீன மக்களின் சிறந்த முதல்வர் தலைவர் மாஓ அவர்களை இந்த வெறித்தனமான காடையர் கோஷ்டி படுகேவலமாக தூசிக்குமளவிற்கு சென்றதாகும். 70 கோடி சீன மக்கள் எள்ளளவும் சகிக்கமுடியாத ஒன்றாக இது இருக்கின்றது. அது அதனுடைய அறிவை இழந்துவிட்டது. என்பதை, சீனாவிற்கு எதிரான மிகபாரதூரமான சம்பவங்களை முன்னமேயே திட்டமிட்டு மிகவெறித்தனமாகவும் மீண்டும் மீண்டும் சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் செய்வது காட்டுகின்றது என்பது உண்மையாக இருக்கின்றது. சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலை நாம் எச்சரிக்கவேண்டும். உங்களுடைய வெறித்தனமான நீசசெயல்களின் மிகப் பாரதூரமான விளைவுகளுக்கான பொறுப்பை நீங்கள் தான் ஏற்கவேண்டும் என்று மக்கள் தினசரி எழுதியுள்ளது.

---

முதன்முறையாக விண்வெளி வீரர்கள் ஒருகோளிலிருந்து ஆட்களற்ற வேறோர் கப்பலுக்கு தாவியது.

வெளியே தாவாமல் ஒரு கப்பலிலிருந்து அதனூடாகவே மற்றோர் கப்பலுக்குள் பிரவேசித்தது.

நிலாத் தரையில் இறங்கிய பின்னர் அங்கிருந்து புறப்படுவதற்கான திட்டத்துக்கான செயல் முறைகள் பரிசீலனை செய்யப்பட்டன. இத்தகைய பரிசோதனைகள் மொத்தம் 17 தடவைகள் செய்யப்பட்டன.

சந்திரமண்டலப் பயணத்திற்குப் பாவிக்கப்படும் சாதனங்கள் அனைத்தையும் கொண்ட முழுக் கப்பல் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட இத்தகைய பயிற்சிகள் ஆட்களற்ற வாகனங்களைக் கொண்டு பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

வானிலிருந்தே பூமியின் பயிர் வளத்தை ஆராய முயற்சிகள் எடுக்கப்பட்டன இதற்கான விசேட காமிரா ஒன்றும் பயன்படுத்தப் பட்டது.

நிலவில் இறங்கும்போது பாவிக்கப்பட விருக்கும் டெலிவிஷன் காமிராவும் இந்த திட்டத்தில் பரீட்சிக்கப்பட்டது.

வீரர் சிவைக்காட் 40நிமிடங்கள் ககனத்தில் சஞ்சரித்தார். உயிர்காக்கும் கருவிகளாகப் பயன்படும் விசேட சாதனங்களும் அப்போது பரீட்சிக்கப்பட்டன.

தொடர்ந்தும் பல இயந்திரங்களை இறக்குமதி செய்வதென கல்வி இலாகா தீர்மானித்துள்ளது.

---

## சிரமதானமூலம் வகுப்பறைகள்

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் இருவகுப்பறைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வகுப்பறைகளை மேற்படி பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம், பழையமகணவர் சங்கம் ஆகியன சிரமதான மூலம் அமைத்துள்ளனவாம்.

---

னை 21ந் திகதி இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் நாவின்னை ஆயுள்வேத ஆராய்ச்சிச் சாலை ஆய்வாளர் டாக்டர் ஆர். ஆர். பட்டாக்கின் பிரிவுபசார வைபவத்திலும் கலந்து கொள்வார்கள்.

---

## அடிக்கல் இடப்பட்டது

அளவெட்டி, ஞாயிறு

மாவை இந்துவாலிபர் சங்கத்தினர் ஒரு நூலகத்தை அமைக்க உள்ளனர்.

மேற்படி நூலக அடிக்கல் நாட்டுவிழா தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

---

சல் அதிபதி கட்டிடத்தைச் சேர்ந்த திரு. துரைராஜா என்ற ஒருவரே தமிழ் மொழிமூலம் சித்தியடைந்துள்ளார். இதுபற்றிஅஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

---

## கார் பறிமுதல்

யாழ்ப்பாணம், திங்கள்

சுமார் 2500 ரூபா பெறுமதியான ஜவுளிகளைக் கொண்டு சென்ற காரை, நேற்று முன்தினமிரவு கொய்யாத் தோட்டத்தில், சிங்கப்பகுதியினர் கைப்பற்றினர்.

சுங்கப் பகுதியை சேர்ந்த திரு. ஜி. கே. ராஜசூரியர் கோஷ்டியினர், கைப்பற்றிய ஜவுளிகளையும், காரையும், சுங்க அதிகாரியிடம் ஒப்படைத்துள்ளனர்.

3 ஒளவையார் சேலைகள், 26, சங்குமார்க் சாரங்கள், 33 டெக்கா சாறிகள், 6 ஆட் சில்க் சாறிகள், 10 சாரங்கள் சுங்கப்பகுதியினரால் கைப்பற்றப் பட்டன.

இது சம்பந்தமாக விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. ஜவுளிகளை கொண்டு சென்ற கார் பறிமுதல் செய்யப்பட்டது.

---

# மே. பாகிஸ்தான் கவர்னர் பதவி நீக்கம்

## எதிர்க்கட்சி கோரிக்கை மீது

## அயூப் நடவடிக்கை

கராச்சி, மார்ச்16

மேற்குப் பாகிஸ்தான் கவர்னர் திரு. மூஸாவை அதிபர் அயூப்கான் பதவி நீக்கம் செய்திருக்கிறார்.

இவரையும் கிழக்குப்பாகிஸ்தான் கவர்னர் முனிம் கானையும் பதவி நீக்கம் செய்யும்படி எதிர்க்கட்சி தலைவர்கள் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். இந்த வற்புறுத்தலுக்கு இணங்கியே பீல்ட்மார்ஷல் அயூப்கான் முன்னால் ராணுவ கமாண்டரான திரு. மூஸாவை மே. பாகிஸ்தான் கவர்னர் பதவியிலிருந்து நீக்கியிருக்கிறார் கிழக்குப் பாகிஸ்தான் கவர்னர் அப்துல் முனிம்கானும் பதவியிலிருந்து நீக்கப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பாகிஸ்தானில் இருமாகாணங்களிலும் கலவரங்களின் போது நூற்றுக்கணக்கானவர்கள் தவறானமுறையில் நடவடிக்கைகள் எடுத்ததுதான் காரணம் என்று எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேற்குபாகிஸ்தான் கவர்னர்மூஸாவுக்குப் பதில்பெரியவணிகரும் அரசியல் வாதியுமான திரு. யூசுப் ஹாரூன் என்பவரை அயூப்கான் கவர்னர்ராக நியமித்துள்ளார்.

# மவுலானு பாசானி தாக்கப்பட்டார்

பீகிங்சார்பு பாகிஸ்தான் தேசிய அவாமிக்கட்சியின் தலைவர் மவுலானு பாசானி சாஹிலார் என்ற இடத்தில் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது நான்கு நபர்களால் தாக்கப்பட்டார். அவருடைய கழுத்திலும் முழங்காலிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

ரயில் யன்னல்களை நொறுக்கிவிட்டு மவுலானுபாசானியை அந்தநால்வரும் கொலை கொலைசெய்யப் போகிறோம் என்றுகூறி இழுத்துச் சென்றார்களாம். அவருடைய கட்சியைச் சேர்ந்தசிலரால் பாசானி காப்பாற்றப்பட்டார்.

தமதுகோரிக்கைகள்நிறைவேறாவிடில் கிழக்குப்பாகிஸ்தானில் உள்நாட்டுப்பேரை ஆரம்பிக்கப்போவதாக திரு பாசானி அறிவித்திருந்தார்.

இதற்கிடையில் காஷ்மீரில் பாகிஸ்தான் வசமுள்ள பகுதியில் குழப்பங்கள் ஏற்பட்டு ராணுவம் அழைக்கப்பட்டிருந்ததாக செய்திகள் கூறுகின்றன. மேற்கொண்டு விபரங்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை.

---

## புத்தபிக்குவுக்கு 10 வருட சிறைத் தண்டனை

சைகோன், மார்ச். 16

தென்வியட்னமில் பிரபல புத்த பிக்குவான வண திக்தியான் மின் எ பவருக்கு சைகோன் நீதிமன்ற மொன்றில்10 வருடகாலம் தண்டனை விதிக்கப்பட்டது. புரட்சிக் காரர்களுக்கு உதவியதாகவும் ஆயுதங்கள் வைத்திருந்த தாகவும் இவர்மீது குற்றஞ்சாட்டப் பட்டிருக்கின்றது. இவரோடு சம்பந்தப்பட்ட மேலும் 8 வாலிபர்களுக்கு மூன்றாண்டிலிருந்து 20 வருடம் வரை சிறைத் தண்டனைகள் விதிக்கப்பட்டன.

---

கலைஞர் கருணாநிதி

# செத்துவிட்டான் என்றுகருதி சாக்கடையில் எறிந்தார்களாம்

## பாண்டிச்சேரி அனுபவம் பற்றி தமிழக முதல்வர் தகவல்

சென்னை, மார்ச் 16

"இன்று திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றுள்ள பாண்டிச்சேரியில் தான், பல்லாண்டுகளுக்கு முன் என்னை அடித்து, செத்து விட்டான் என்று கருதிச் சாக்கடை ஓரத்தில் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். யாரோ எடுத்து எனக்கு மூச்சு வரவழைத்தார்கள்."

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி, சென்னையில் நம்மாழ்வார் பேட்டையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தம்மைப் பற்றிய தகவலை வெளியிட்டார். இந்தக் கூட்டத்தில் புதுச்சேரி முதலமைச்சராகப் பதவி ஏற்கவிருக்கும் திரு. பரூக்மரைக்காயரும் கலந்து கொண்டார். திரு. கருணாநிதி மேலும் பேசுகையில் கூறியதாவது:

இன்று நாம் வெற்றிபெற்றிருக்கும் அதே பாண்டிச்சேரியில்தான் பல்லாண்டுகளுக்கு முன் செத்துவிட்டான் என்று கருதி என்னை அடித்தவர்கள் சாக்கடை ஓரத்தில்வீசி எறிந்துவிட்டுச் சென்றார்கள். யாரோ எடுத்து எனக்கு மூச்சு வரவழைத்தார்கள்.

அங்கிருந்து தப்பிச் செல்லத் தலையில் குல்லாய் அணிந்து, கைலி கட்டிக் கொண்டு முஸ்லிம்போல நான் வெளியேறினேன். ஈரோட்டிற்குச் சென்று குடியரசு அலுவலகத்தில் பணியாற்றிடச் சென்றேன்.

அதே பாண்டிச்சேரியில் 1957ம் ஆண்டு அண்ணாவின் பேச்சைக்கூடக் கேட்காமல் கழகத்தைச் சில நண்பர்கள் தேர்தலில் ஈடுபடுத்தினார்கள். ஆனால் வேட்பாளர்கள் அனைவருமே ஜாமீன் இழந்தார்கள். அதைக் கேலிசெய்து காங்கிரஸ்காரர்கள் ஒரு கேலிச் சித்திரம் வரைந்து நாடெங்கும் ஒட்டினார்கள்.

அந்தக் கேலிச் சித்தரத்தில் பாண்டிச்சேரித் தேர்தல் என்ற பாடையில் தி.மு. கழகம் இருக்கும். அந்தப் பாடையை நெடுஞ்செழியனும், அன்பழகனும், மதியழகனும் என். வி. நடராசனும் சுமந்துகொண்டு செல்வார்கள். சத்தியவாணி முத்து ஒப்பாரி வைப்பார். நான் கொள்ளிச்சட்டி தூக்கிக்கொண்டு செல்வதாகப் படம் போட்டார்கள்.

அப்போது அவர்கள் தந்த கொள்ளிச்சட்டியை அப்படியே வைத்திருந்தேன். இப்போது காங்கிரசுக்கு வைத்து இறுதி மரியாதை செய்ய,

ஏப்ரல் 19-ம் தேதி புது டெல்லியில் முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற இருக்கிறது. அப்போது தி. மு. கழக முதலமைச்சராக நான் மட்டும் போகமாட்டேன். பரூக் அவர்களையும் அழைத்துச் செல்வேன். இரண்டு தி. மு. கழக முதலமைச்சர்களாக செல்வோம் அதைப்பார்க்கும் காங்கிரஸ் காரர்கள் திகைப்படையவர்கள். யார்? பரூக்கா? 'நம்மிடமிருந்தவரா? இப்போது தி. மு. க. முதலமைச்சரா என்று ஆச்சரியமடைவார்கள்.

பருவமடைந்த மங்கை எதிர்வீட்டு வாலிபனைப்பார்த்து மையல் கொண்டபின் கடிதப்போக்குவரத்து நடந்து அது பெற்றோர்களுக்குத் தெரிந்து இந்தக் காதல் எங்கே திருமணத்தில் போய் முடிந்துவிடுமோ என்று அஞ்சுவார்கள். பருவமங்கையை அறையில் அடைத்துவைப்பார்கள்.

எதிர்வீட்டு வாலிபன் வீரனாக இருப்பதால் மங்கையும் வீராங்கனையாக இருப்பதால் இருவரும் வெளியேறி திருமணம் புரிந்துகொள்வார்கள்.

ஏதாவது ஒரு விழாவில் அந்தப்பெண்ணின் பெற்றோர் அந்த வாலிபனைச் சந்திப்பார்கள். பக்கத்தில்



இருக்கிறபெண்ணைப் பார்த்து யார் அது என்பார்கள். உங்கள் பெண்தான் என்பான் - வாலிபன். அவர்கள் முகம் வாடும்; வதங்கும்!

அதுபோல் பரூக்கைக் காட்டி நான் டெல்லியிலுள்ளவர்களுக்கு அறிமுகப்படுத்துவேன். அவர்கள் எந்த அளவுக்கு முகம் கோணிப் போவார்கள் என்பதை நீங்கள் கற்பனைசெய்துகொண்டு பார்த்து சிரித்துக்கொள்ளுங்கள்! கட்டுப்பாட்டை மீறியவர்தானே பரூக்என்று காங்கிரஸ்காரர்கள் கூறக்கூடும். அதற்கு பதில் இப்போதே தந்துவிடுகிறேன்.

பரூக் எதைக் காதலித்தார் தி மு. கழகக் கருத்துக்களைக் காதலித்தார்.

அண்ணா அவர்கள் படி அரிசித்திட்டம் கொண்டு வந்தபோது பாண்டிச்சேரி காங்கிரஸ் முதலமைச்சராயிருந்த பரூக் மரைக்காயர் எனக்குக்கூட இந்தநல்லதிட்டத்தை ஏற்று நடத்த தோன்றுகிறது என்று கூறினார்.

காங்கிரஸ் கட்சியில் சலசலப்பு ஏற்பட்டது. கண் எங்கேயோ பாய்கிறதுஎன்று கவலைப்பட்டார்கள்.

டெல்லி தமிழர்கள் சங்கக் கூட்டத்தில் ஒருமுறை பரூக் பேசும்போது, எப்படித் தமிழகம் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கிறதோ அப்படித்தான் புதுவை மாநிலமும் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும்என்றார். ஏது இது விபரீதமாகப் பாய்விட்டதே என்றுகருதி பரூக்கை அறையில் பூட்டி வைத்தார்கள். ஆனால் அவரோ கழகத்துடன் கூடி மணம் புரிந்து கொண்டார். புதுடெல்லியில் தனது பெற்றோர்களை சந்திக்க இருக்கிறார்.

காங்கிரசின் வீழ்ச்சிபாண்டிச்சேரியில் மட்டுமல்ல இந்தியாமுழுவதும் நடந்து கொண்டிருக்கிறது.

---

## ஒரு விளக்கம்

13-3-69-ந் தேதியைக் கொண்டு ஈழநாட்டுப்பத்திரிகையின் 2-ம் பக்கத்தில் 'கி. ச. அலுவலகத் திற்கு காணிவாங்கும் பிரச்னை முடிவெடுப்பது ஓராண்டுக்கு ஒத்திபோடப்பட்டது' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி சம்பந்தமாக அராலி கிராமசபைத்தலைவர் திரு. இ. நாகலிங்கம் கீழ்க்கண்டவாறு அறிவிக்கிறார்.

'முதலாம்வட்டார அங்கத்தவர் அலுவலகம் எங்கு அமைப்பதென்று தீர்மானிக்காது காணி கொள்வனவு செய்வதற்குச் சபையின் அங்கீகாரம் கோருவது ஒழுங்கற்றதென ஒரு பிரச்னையைச் சபைக்கு எழுத்து மூலம் சமர்ப்பித்தார்'' எனப் பிரசுரிக்கப்பட்ட செய்தி தவறானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சமூகத்திலிருந்து தீமையை அகற்றும் நற்பணியில் ஈடுபட்டிருப்போர் ஒழுங்கான முறையில் செயலாற்ற வேண்டும். தங்கள் முயற்சி உடனடியாக வெற்றி பெறவில்லையென்று மனமுடைந்துவிடக்கூடாது.

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,
யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 4-ந் திகதி
(17-3 69)

## ஒரு பெரிய குற்றச்சாட்டு

வேம்படி மகளிர் கல்லூரியிலே நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒரு விழாவில் யாழ்ப்பாண பிரதிநிதி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கல்வி விஷயமாக ஓர் உண்மையை வலியுறுத்திச் சொன்னார். கல்விக்கான பொறுப்பை அநேகமாக முழுதும் எடுத்துக்கொண்டுவிட்ட அரசாங்கம், கல்வி ஸ்தாபனங்களுக்குத் தேவையானவற்றையெல்லாம் செய்துகொடுக்கக் கடமைப்பட்டுள்ளதென்றும், ஆனால் இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்குச் சென்ற அரசாங்கம் மட்டுமன்றி இப்போதுள்ள ஆட்சியாளரும் தவறிவிட்டனரென்றும் குற்றஞ்சாட்டினார். இந்தப் பெரிய குற்றத்தை மறுக்க கல்வி அமைச்சருள்ளிட்டு இந்த அரசாங்கத்தாலும் முடியுமா?

இலங்கையிலே இலவசக் கல்விமுறையை அமுலுக்குக் கொண்டுவந்தபின், எல்லாரும் படிக்க முன்வருகின்றனர். ஆனால் போதிய பள்ளிக்கூடங்களில்லை. புதிய பள்ளிக்கூடங்களைத் திறப்பதாயின் அரசாங்கத்துக்கு அதிக செலவாகும். செலவு செய்யப் பணம் இல்லை. தனிப்பட்டவர்களுக்கும் கல்விக்கூடங்களை நடத்த அனுமதி கிடைக்காது. பள்ளிக்கூடங்களில் இடமில்லாத காரணத்தால் பல வாலிபர்கள் படிக்கமுடியாமல் தவிக்கின்றனர். இருக்கும் பள்ளிக்கூடங்களை பழுதுபார்க்கவும், விஞ்ஞானகூடம் முதலிய அவசிய அபிவிருத்திகளைச் செய்யவும் போதிய மான்யமளிக்க முடியாமல் கல்வி அமைச்சு சங்கடப்படுவது பகிரங்க ரகசியம். இந்த இரண்டுங்கெட்டான் நிலைமையால் மாணவமாணவிகளுக்கு எவ்வளவு சங்கடம் என்பதை விளக்கத்தேவையில்லை. உயிர்போன்ற இந்தப் பிரச்னைக்கு பரிகாரம் காண்பது அரசாங்கம் மட்டுமன்றி பொதுமக்களின் பெரிய கடமையுமாகும்.

கல்விப் பணியை முன்னர் பல சமயஸ்தாபனங்களும் சிறப்பாகச் செய்துவந்தன. ஆனால் தங்கள் சமயத்தைப் பரப்பவும் மாற்றவும் சில சமய ஸ்தாபனங்கள் பயன்படுத்தியதாலும், மற்ற சமய மாணவ மாணவிகளுக்கு அவர்களது சமயத்தைப் போதிக்க மறுத்ததாலும், மக்கள் அரசாங்கம் கல்வி ஸ்தாபனப் பொறுப்பை எல்லாம் தானே எடுத்துக்கொள்ள நேரிட்டது. நாட்டில் சமய சமரச உணர்ச்சி அதிகரித்து, எல்லாச் சமய மாணவர்களுக்கும் அவரவர்களது சமயத்தைப் போதிக்கவேண்டிய அவசியத்தையும் பல சமயப் பெரியார்களும் உணர்ந்துள்ளதால், இதுபற்றி சம்பந்தப்பட்ட அனைவரும் புனராலோசனை செய்யவேண்டிய சமயம் வந்துவிட்டது.

நாட்டின் எதிர்காலப்பிரஜைகளான நமது மாணவ மாணவிகளுக்கு மேலான பயனுள்ள கல்வியை அளிக்க அரசாங்கத்தால் மட்டும் முடியவில்லையாகையால், பொதுமக்களின் உதவியையும் அரசாங்கம் மீண்டும் நாடவேண்டும். கல்வி அமைச்சர் போன்ற ஒரு தனிப்பட்டவரின்கையில், கல்விப் பொறுப்பு அனைத்தையும் ஒப்படைப்பதால், சர்வாதிகாரத்துவம் தலைதூக்கி, அரசாங்கத்தின் நற்பெயருக்கே தீங்கு ஏற்படுகின்றது ஆசிரியர் இடமாற்ற விஷயமாக ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி, அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளமண்டையிடிகள்கொஞ்சமன்று. பொதுமக்களிடையே இவ்வித பல குறைகள் புழுங்குவதால் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் உதவியையும் பூரணமாகப் பெறும்வகையில், கல்விமுறையைத் திருத்தி அமைக்க முன்வருவதே, அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் பல விதங்களிலும் நன்மையளிப்பதாகும்.

# கிழவிகள் என்றாலே கூனியின் நினைவுதான் ஏற்படும்

கலையரசு சொர்ண லிங்கத்தாரின் நாடகத்தைப் பார்த்த பின் கிழவிகள் என்றால் கூனியும், அழகிய இளம்பெண் என்றால் கைகேயியும் தான் நினைவு வருமாம், திரு. கே. சி. தங்கராசா அவர்களுக்கு. தமது பால்ய நினைவுகளை இங்கே கட்டுரையாகத் தருகின்றார்.

ஏறத்தாழ ஐம்பதாண்டுகளுக்கு முன்னைய வண்ணார் பண்ணையும், அங்கு நடந்த நாடக-நாட்டிய-கலை நிகழ்ச்சிகளும் என் மனக்கண் முன் தோன்றுகின்றன. தமிழ் நாடகநிகழ்ச்சிகளுக்கு மட்டுமல்ல, நாட்டிய நிகழ்ச்சிகளுக்கும், இன்னும் பிற கலை நிகழ்ச்சிகளுக்குப் கேந்திர ஸ்தானமாக விளங்கிய இடம் வண்ணார் பண்ணை.

இன்றைய மனோகரா தியேட்டர் இருக்கும் இடத்தில்-நாவலர் சந்தியில்-அன்று பிரசித்திபெற்று விளங்கிய புத்துவாட்டி இரத்தினத்தின் நாடகக் கொட்டகை-சிறப்புடன் வீற்றிருந்தது, எனக்கு நினைவிருக்கிறது. அன்றைய நாடக உலகில் கொடிகட்டிப் பறந்த காலஞ்சென்ற கோவிந்தசாமிப்பிள்ளை-கோரங்கி மாணிக்கம் போன்ற நாடக உலக ஜாம்பவான்கள் அடிக்கடி வந்து நாடகங்கள் நடத்துவதும், அவற்றிற்கு நாட்டின் நாலா பகுதிகளிலிருந்தும் திரளான இளைஞர்களும், பெரியவர்களும் வந்து கூடுவதும் என் நினைவில் இன்னும் நிற்கின்றன. அந்தக் காலத்தில் பெண்கள் நாடகங்கள் பார்க்கப்போவதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்த நாட்களிலெல்லாம், தமிழகத்திலிருந்தும், வேறு பல இடங்களிலிருந்துப் அடிக்கடி வரும் கலைஞர்களுக்கெல்லாம் கௌரவ மருத்துவராகக் கடமையாற்றியவர் எனது தந்தையாராதலால்-பச்சிளம் பாலகனாக இருந்த நான் பெரும்பாலான நிகழ்ச்சிகளுக்கு எனது தந்தையாருடனேயே சென்று வந்திருக்கிறேன்.

இப்படியாக, எத்தனையோ நிகழ்ச்சிகளுக்கு-நாடகங்களுக்கு நான் சின்னஞ்சிறு வயதிலிருந்தே சென்று வந்திருக்கிறேன். என்றாலும் என் மனதில்-பசுமரத்தாணி போலப் பதிந்துவிட்ட ஒரு நிகழ்ச்சி உண்டு.

எங்கே நடந்தது, எப்போது நடந்தது என்றெல்லாம் எனக்கு நினைவில்லை. எனது பால்ய மனதில் பதிந்துவிட்ட ஒரு நாடகப்-அதிலே ஒரு காட்சி என் நினைவிற்கு வருகிறது.

அந்த நாட்களை இன்று எண்ணிப்பார்க்கிறேன். கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் கூனியாக நடித்ததும், காலஞ்சென்ற சரவண முத்து அவர்கள் கைகேயியாக நடித்ததும் என் மனத்திரையில் வருகின்றன.

கூனியும், கைகேயியும் ...

அடுத்து, நான் ஆனந்தாக் கல்லூரியில்சேர்ந்து பயின்றுகொண்டிருந்த ஆரம்ப நாட்கள் நினைவுத் திரையில் தோன்றுகின்றன.

திரு. எஸ். ஆர். கனகநாயகம் அவர்கள், பல்கலைக் கழகபடிப்பை முடித்துவிட்டு வந்து, எங்களுக்குத் தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தார். தமிழ்ச் சங்கத்திற்கு நிதி திரட்டுவதற்காக 'மனோகரன்' என்ற நாடகத்தை மேடையேற்ற நாங்கள் தீர்மானித்

## இளம் பெண் என்றால் கைகேயி முன்நிற்பாள்

ததையும், கலையரசுசொர்ணலிங்கம் அவர்கள் எங்களுக்குப் பல மாதங்கள் நாடகப் பயிற்சிஅளித்ததையும் நான் இன்றுஇரைமீட்டிப்பார்த்து மகிழ்கின்றேன்.

கொழும்பிலே. சுபோத விலாச சபையின் ஆதரவில் வைத்திய கலாநிதி சரவணமுத்துவின் தலைமையில் நாடகங்கள் வெற்றிக்கொடிநாட்டிக்கொண்டிருந்த அந்த நாட்களிலேதான், மாணவர்களாகிய நாங்கள் மனோகரன் நாடகத்தை நடத்த முடிவெடுத்தோம். கலையரசு சொர்ணலிங்கம் எங்கள் முயற்சிக்கு கைகொடுத்து உதவினார்.

### தமிழாசிரியர் கதாநாயகன்

தினசரி நாடக ஒத்திகைகள் நடந்தன, கலையரசு தினசரி வருவார், வசனம் பேசச் சொல்லிக்கொடுப்பார், நடிக்கச் சொல்லிக் கொடுப்பார், பாடக் கற்றுக் கொடுப்பார். எங்கள் தமிழாசிரியர் திரு. எஸ். ஆர். கனகநாயகம்தான் நாடகத்தின் கதாநாயகன் 'மனோகரன்'.

பல மாதங்கள் இரவுபகலெனப் பாராது, மாணவர்களாகிய எங்களுடன் ஒத்துழைத்து எங்கள் முயற்சிக்கு ஊக்கம்தந்து எங்கள்நாடகமான 'மனோகரன்' அன்றைய மேடைகளிலே அரங்கேற்றிய நாடகங்களிலேயே மிகச் சிறந்தநாடகமாக அமைய பெரும் உதவிசெய்த பெருந்தகை கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் தான் என்பதை இன்று நினைக்கும்போது உள்ளமெல்லாம் உவகையால் பொங்கியெழுகின்றது.

இப்படியாக எனது பிள்ளைப் பராயத்திலிருந்தேகலையரசு சொர்ணலிங்கத்தின் அளப்பரிய சேவைகளின் பாதிப்புக்கு ஆளாகியவன் என்ற பெருமையுடன், கலையரசு சொர்ணலிங்கத்தின் மணிவிழாவிலே கலந்துகொள்வதோடு, காலத்தால் மறக்கமுடியாத இப்பசுமை நினைவுகளை எழுத்தில் இடம் பெறச் செய்வதில் மகிழ்வடைகிறேன்,

### திரு. கே. ஸி. தங்கராசா



தமிழகத்திலே சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் போன்றோர் தோன்றி தமிழ்நாடகக் கலையின் மரபைப் பேணிப்பாதுகாத்து, கட்டிக்காத்து, வளர்த்துவந்தனர். அவர்கள் அங்கே தோன்றி நாடக உலகின் நலிவுகளை நீக்க உறுதியுடன் உழைத்திராவிட்டால் இன்று தமிழ் நாடகக் கலை என்று ஒன்றே இருந்திருக்க முடியாது.

தமிழகத்திலே இவர்கள் ஆற்றிய அரும் சேவைகளுக்கு ஒப்பாக ஈழவளநாட்டிலே கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் தமிழ் நாடகக் கலைக்கும் தமிழ் நாடகக்கலை மரபு காக்கப்படுவதற்கும் அளப்பரிய தொண்டாற்றியிருக்கிறார்கள். இன்னும் சொல்வதானால், இன்றுஈழத்திலே தமிழ் நாடகக் கலையும், மரபும் அழியாது பாதுகாக்கப்பட்டு உள்ளது என்றால், அது கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் தனிமனிதனாக நின்று செய்துள்ள சேவைகளினால்தான் முடிந்தது என்று கூறுவது சாலப் பொருத்தமானதாகும்.

கலையரசு அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் நீடூழி வாழ்ந்து, ஈழவளநாட்டில் தமிழ்க் கலைகள் சிறப்புற்று வளர சேவையாற்றவும், அவர் புகழ் தமிழ் கூறு நல்லுலகமெங்கும் பரவவும் எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பானாக.

## நாடகத்துறைக்கு பெருமையளித்தவர்

கலையரசு என்று சொன் ... நன்றியும் கடமைப்பாடு

### பின்னிப்பிணைந்த வாழ்க்கை

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு இலங்கையின் நாடக ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாறன் எழுதுவது

வேம்படி பெண்கள் கல்லூரியிலே புதிய விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு விழாவும் காட்சியும் நடப்பதாக ஓர் அழைப்புக் கிடைத்தது. அக்கல்லூரியில் உயர்வகுப்பு மாணவிகள், எஸ். எஸ். ஸி; எச். எஸ். ஸி. பரீட்சைகளில் அசாதாரண சித்தி பெற்றிருந்தால் அவர்களது பெயர்களைக் கௌரவ இடாப்பில் எழுதுவதுடன், அவர்களுக்கு விசேஷ பதக்கமும் சான்றிதழும் அளிப்பதென்று நல்லதோர் ஏற்பாடுசெய்துள்ளனர். படிப்பில் மட்டுமல்ல, விளையாட்டுகளிலும் பழைய 'ரிகார்டு'களை மிஞ்சியவருக்கும் இந்த கௌரவம் அளிக்கிறார்கள். இந்த ஏற்பாடு மற்றக் கல்லூரிகளுக்கும் மேலானதோர் முன்மாதிரியாகும்.

0 0 0

அக்கல்லூரியை ஸ்தாபித்து 131 ஆண்டுகளாகின்றனவாம். விழாவுக்குத் தலைமைவகித்த யாழ்ப்பாண பிரதிநிதி ஜி. ஜி. யின் பாட்டியாரும்கூட இக்கல்லூரியின் பழைய மாணவி என்று அதிபர் மிஸ் தம்பையா மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் அறிவித்தார்.

அதிபர் மிஸ். தம்பையா அக்கல்லூரியில்ஆசிரியராகச் சேர்ந்து 31 ஆண்டுகளுக்கு மேலாகின்றனவாம். அவர் அதிபரான பின் சுமார் 4 லட்ச ரூபாய்வரை வசூலித்து, இக்கல்லூரிக்குள் பல புதிய புதிய கட்டடங்களைக் கட்டியுள்ளது போற்றத்தக்கதாகும்.

புதிய விஞ்ஞான ஆய்வுக்கூடம் அங்குபடிக்கும் மாணவிகளுக்குப் பெரிதும் பயன்படக்கூடும். அத்துடன், அங்கு படிக்கும் 2300க்கு மேற்பட்ட மாணவிகள் சேர்ந்து கூட பெரிய மண்டபம் அங்கில்லாதது பெரிய குறையே. இக்குறை இங்குள்ள பொதுமக்களின் உதவியால் தீரவேண்டுமென்று அதிபர் தெரிவித்த நன்நோக்கத்துக்கு பூரண ஆதரவு கிடைத்து, அது சிக்கிரம்நிறைவேறுமென்றே நம்புவோம்.

இப்புதிய கட்டிடத்துக்குப் பெயர் எதுவுமிடவில்லை தம்வாழ்நாளில் பெரும் பகுதியை அதின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்த அதிபர் மிஸ் தம்பையாவின் பெயரையே அதற்கு வைப்பது, மிகப்பொருத்தமும் நன்றியுமாகும்.

0 0 0

அங்கு மாணவிகள் நடத்தும் அழகான விஞ்ஞான, கலைக்காட்சியைக் கண்டேன். மிக உற்சாகத்துடன் பல மாணவிகள் அவற்றை விளக்கினர். நமக்குப் பதட்டம் இருக்கிறதா இல்லையா என்பதைக்காட்ட ஒரு கருவி செய்திருந்தனர். அதில் பலரும் பரீட்சித்துப் பார்த்தார்கள். பதட்டமே சிறிதும் இல்லாதவர்களயாரும் உண்டா என்பது தெரியவில்லை. நீங்களும் போய்ப்பார்க்கலாம்.

அக்கல்லூரியில் 2300க்கு மேற்பட்ட மாணவிகள் படிப்பதை அறிந்ததும் என் மனம் ஒரு கணக்குப் போட்டது. இவர்களில் பலர் சர்வகலாசாலைக்குச் செல்லலாம். எஸ். எஸ். ஸி. பரீட்சையில் அநேகமாக எல்லாரும் சித்தி பெறக்கூடும். அப்படியாயின், அவர்களுக்கு விவாகத்துக்காக மொத்தம் எவ்வளவு சீதனம்கொடுக்கவேண்டியிருக்குமென்று கணக்கிட்டதில், பல கோடி ரூபாய் தேவைப்படுமென்று தெரிந்தது. இதைஒரு மாணவியிடம் கூறியபோது, அவர் சிரித்துவிட்டு, பல மாணவிகள் "எங்கள் அதிபரைப் போல் விவாகமில்லாமலே இருந்துவிடலாம்" என்றார். ஆனால் அவ்வளவு மகத்தான தியாகத்தைச் செய்யக்கூடிய பெண்மணிகள் எவ்வளவு பேருண்டு!

பெற்றோர்கள் இஷ்டப்பட்டு அன்புடன் அளிக்கும் சீதனத்தைப் பெறுவதில் தவறில்லை. ஆனால் அதை ஓர் மார்க்கெட் போல் பேரம் பேசி, நம் பெண் குலத்தை அவமதிக்கும் மடத்தனம் எப்போது நம்மைவிட்டு நீங்கப்போகிறதோ! படித்த பெண்கள் தான் இதை நீக்க கச்சை கட்டி முன்வரவேண்டும்.

0 0 0

கல்வி ஞானக் கலைப்
பொருளாயவன்
செல்வம்மல்குதிருக்கானா
ரீசனை
எல்லி யும் பகலும்
மிசை வானவர்
சொல்லி டீர் நுந்
துயரங்கள் தீரவே.
—அப்பர் அடிகள்.

கலையரசர் விழா

கலையரசர் விழா

வது பகிரங்க ரகசியம். இந்த இரண்டுங்கெட்டான் நிலைமையால் மாணவமாணவிகளுக்கு எவ்வளவு சங்கடம் என்பதை விளக்கத்தேவையில்லை. உயிர்போன்ற இந்தப் பிரச்னைக்கு பரிகாரம் காண்பது அரசாங்கம் மட்டு மக்களின் ஒத்துழைப்பையும் உதவியையும் பூரணமாகப் பெறும்வகையில், கல்வி முறையைத் திருத்தி அமைக்க முன்வருவதே, அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் பல விதங்களிலும் நன்மையளிப்பதாகும்.

## கலையரசர் விழா

கலையரசு சொர்ணலிங்கத்தாருக்கு எண்பது வயது பூர்த்தியடைகிறது.

அன்னார் ஈழத்தில் நாடகக் கலையின் வளர்ச்சிக்கு ஆற்றிய அளப்பரிய சேவையைப் பாராட்டுமுகமாகவும் அவருக்கு நன்றிசெலுத்துமுகமாகவும் ஈழம் வாழ் தமிழ் மக்களின் சார்பாக இலங்கை இளம் நடிகர் சங்கம் இன்றும் நாளையும் விழா எடுக்கின்றது. கலைஞர்களையும், அறிஞர்களையும், பெரியோர்களையும் அவர்கள் உயிர் வாழும்போதே கௌரவிக்கும் பண்பு தமிழர்களிடத்தில் இல்லை என்ற அவச்சொல் இப்போது நீங்கிவருகிறது இதற்கு கலையரசர் விழாவும் ஓர் உதாரணம்.

''கூத்தாடுவது ஆத்தாதவன் செய்யும் தொழில் என்று எள்ளிநகையாடப்பட்ட காலத்திலேயே துணிச்சலுடன் நாடகங்களை உருவாக்கி, நடித்து கலைத் திறமையுடையவர்களையும் நடிக்கவைத்து கலைஞர்களாக்கி நாடகக் கலையை இங்கு வளர்த்தவர் திரு. சொர்ணலிங்கம் 'கலையரசு' என்று பட்டமளித்துக் கௌரவித்த மக்கள் அவருக்கு 'கலைச் சக்கரவர்த்தி' என்று பட்டம் சூட்டலாம் என்று ஓய்வு பெற்ற நீதியரசர் டாக்டர் தம்பையா கூறியிருப்பது பொருத்தமே.

கலையரசு சொர்ணலிங்கம் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து கலைத் தொண்டு புரிய வேண்டுமென வாழ்த்தும் பல்லாயிரக்கணக்கான கலைநெஞ்சங்களுடன் சேர்ந்து நாமும் வாழ்த்துகின்றோம்.

# வழுவூரார் மாணவிகளின் நடன அரங்கேற்றம்

## இன்று கொழும்பில் நடக்கிறது

தில்லையில் ஆனந்தக் கூத்தாடிய ஆடற் தெய்வத்தின் காலடிகளுக்குத் தம்மை அர்ப்பணித்து, ஆடற் கலைக்கு அழகூட்டப் பிறந்த ஈழத்துக் கலைச் சகோதரிகளின் நடன அரங்கேற்றம் இன்று கொழும்பில் நடைபெறுகிறது.

பரதக் கலையை பாரறியச் செய்து, கலைத் தெய்வத்துக்கு நல்ல முத்துக்களை தொடுத்துக் கொடுக்கும் புனித பணியில் ஈடுபட்டிருக்கும் தமிழக இசைப் பேரறிஞர் வழுவூர் ராமையாபிள்ளையிடம் குருகுல முறைப்படி நடனம் பயின்ற கொழும்பு ஸ்ரீகாந்தம் சகோதரிகளான சரோஜினி, விசாக்கா, தர்மா மூவரின் நடன அரங்கற்றம் வழுவூராரின் நட்டுவாங்கத்துடன் கொழும்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் இன்று மாலை இறைவரிப் பகுதிக் கமிஷனர் திரு. எஸ். சிற்றம்பலம் தலைமையில் நடக்கவிருக்கிறது.

தன் மாணவிகளின் திறமையிலும், ஆற்றலிலும் அபார நம்பிக்கை கொண்டதினுல் வழுவூரார் தமது அன்புக்குப் பாத்திரமான மாணவிகளின் அரங்கேற்றத்துக்குத் தாமே நட்டுவாகம் செய்ய தமது கோஷ்டியினருடன் கொழும்பு வந்துள்ளார்.

சிறு வயதுமுதலே நடனக் கலையைப் பயின்ற ஸ்ரீகாந்தம் சகோதரிகள் கடந்த ஒருவடத்துக்கு மேலாக தமிழகத்தில் வழுவூராருடன் தங்கியிருந்து முறைப்படி பரதத்தைப் பயின்றனர்.

''சிறந்த குருபக்தியும், அடக்கமும், ஆற்றலுமிக்க திறமையான மாணவிகள்'' என்று இந்த இளம் கலைச் சகோதரிகள் பற்றி கலைகளின் குருவான வழுவூராரே குறிப்பிடுகிறுர்.

கொழும்பு இறைவரிப் பகுதியில் கடமையாற்றும் திரு. கே. ஸ்ரீகாந்தம், ராஜேஸ்வரி ஸ்ரீகாந்தம்தம்பதிகளின் புதல்விகளான இவர்களை ஆடற் தெய்வம் நிச்சயமாக ஆசீர்வதிக்கும்.

— ராஜன்

அந்த நாட்களை இன்று எண்ணிப்பார்க்கிறேன். கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் கூனியாக நடித்ததும், காலஞ்சென்ற சரவணமுத்து அவர்கள் கைகேயியாக நடித்ததும் என் மனத்திரையில் வருகின்றன.

கூனியும், கைகேயியும் இராமனுக்கு எதிராகச் சூழ்ச்சிசெய்வதையும், இராமனைக் கஷ்டப்படுத்தத் திட்டந் தீட்டுவதையும் எனது இள மனது ஏற்கவில்லைத்தான். என்றுலும், கலையரசு சொர்ணலிங்கத்தின் அபார நடிப்புத் திறமையினுல், கிழவிகள் என்றுலே கூனியையும், காலஞ்சென்ற சரவணமுத்துவின் நடிப்புத் திறமையால் அழகிய இளம் பெண்கள் என்றவுடனே கைகேயியையும் நினைவு கூரும்படி இந்நிகழ்ச்சி என் உள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்டது.

இந்த நாடகத்தைப் பற்றிய மற்ற விவரங்களையெல்லாம் நான் மறந்துவிட்டேன். மற்ற நடிகர்கள்-ஏனைய காட்சிகள் எல்லாமே என் நினைவை விட்டு நீங்கிவிட்டன-ஆனுல்,

கூனியும், கைகேயியும் என் மனதில் இன்றும் நீங்காமல் நிலைத்து நிற்கின்றனர்.

கூனியும், கைகேயியுமாக வந்தவர்கள் ஆண்கள்தான் என்பதைக்கூட நான் அன்று அறிந்திருக்கவில்லை. சொல்லியிருந்தாலும் நம்பியிருக்க மாட்டேன்.

இப்படியாக, என் மனதிலே, நாடகக் கலையைப் பற்றியும், தமிழ்க் கலைகள் பற்றியும் ஆர்வம் துளிர்விட ஆரம்ப காரணமாகக் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் இருந்திருக்கிறுர்கள் என்பதனை எழுத்தில் வடிக்கக்கூடிய வாய்ப்பு இன்று ஏற்பட்டிருப்பதையிட்டு நான் பெரு மகிழ்ச்சிகொள்கிறேன். என்னைப் போலவே இன்னும் எத்தனையோ பேர் நாடக உலகிலும், அதனேடு சம்பந்தப்பட்ட கலைகளிலும் ஆர்வம் காட்டக் காரணகர்த்தாவாக விளங்கியவர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் தான் என்றுல் மிகையாகாது.

### விற்பனைக்கு

இனிப்பு முந்திரியப் பழம் விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 6/-. R, தனநாயகம், தொண்டைமானுறு. 775

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்...

முயற்சிக்கு கைகொடுத்து உதவினுர்.

த்துவந்தனர். அவர்கள் அங்கே தோன்றி நாடகஉல

அருள்பாலிப்பாளுக.

# நாடகத்துறைக்கு பெருமையளித்தவர்

கலையரசு என்று சொன்னுலே போதும். அது ஈழநாட்டில் திரு. சொர்ணலிங்கம் ஒருவரைத்தான் குறிக்கும் சென்ற 67 ஆண்டுகளாக நாடகக்கலையோடு தொடர்புடைய ஒரு பெரியார் நம் கலையரசர்.

தமிழ் நாடகத் தலைமையாசிரியரெனப் போற்றப்படும் தவத்திரு சங்கரதாஸ சுவாமிகளின் நல்வாக்கினை பெற்றவர் திரு சொர்ணலிங்கம். நாடகப் பேராசிரியர் பத்மபூஷணம் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களைத் தம்நாடகப் பேராசானுகக் கொண்டவர் கலையரசர். அவரது குடும்பமே ஒரு கலைக்குடும்பம். ஈழத்தின் நாடகத்துறைக்குப் பெருமையளித்த பெரியார் இவர்.

மனேகரா வேதாள உலகம், வாணிபுரவணிகன், பாதுகா பட்டாபிஷேகம் முதலிய நாடகங்களில்மனேகரன், தத்தன், ஷைலக், கூனி, மந்தரை, பரதன் ஆகிய பல்வேறு குணப்பண்புடைய பாத்திரங்களில் நடித்து இவர் தமது நாடகமுத்திரையப் பொறித்துள்ளார் கலை உலகுக்கே உரித்தானதென்று பலர் கருதிவரும் தீய பழக்கங்கள் எதுவும் இப் பெரியாரைத் தீண்டியதில்லை. தமது எண்பதாவது வயதிலும் இளமையுணர்வோடு திகழும் ஈழத்தின் கலையரசர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து நாடகக் கலையை வாழ்விக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன் தாய்த்தமிழ் கலைஞர்கள் சார்பில் என் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் செலுத்துகின்றேன்.

**அவ்வை டி.கே.சண்முகம்**
தமிழ்நாடு மேல்சட்டசபை உறுப்பினர்

### 'கலைச்சக்கரவர்த்தி'

இலங்கையில் தமிழ் நாடகத்தை முன்னேற்றுவதற்கும் அதன் உணர்ச்சிக்காக உழைத்துஅளப்பரிய சேவையாற்றியதற்கும் இலங்கைத் தமிழ் மக்கள் கலையரசு சொர்ணலிங்கத்திற்கு என்றும் கடமைப்பாடுடையவர் நன்றியும் கடமைப்பாடுமுள்ள பொதுமக்கள்அன்னருக்கு 'கலையரசு'என்ற பட்டத்தைச் சூட்டியுள்ளனர். நான் அவரை ஈழத்தின் கலைச்சக்கரவர்த்தி என்று அழைக்க விரும்புகிறேன். இந்தப்பெயரால் இவர்இனிமேல் அழைக்கப்படுவார் என எண்ணுகின்றேன்.

நான் தற்பொழுது அவரைப் பாராட்டுவதற்கு இலங்கையில் இல்லையே என்று மிகவும் வருந்துகின்றேன். கலையரசர் பூரண சுகமும் நீண்ட ஆயுளும் பெற்றுஎங்களுக்குமேலும்நல்ல சேவைகளைச் செய்ய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு தம்பையா கியூ.ஸி.**

### மங்காப்புகழ் படைத்தவன்

நாடகப் பேராசான் சொர்ணலிங்கம் அவர்கள் நாடகக் கலையின் அரசன்; நாடகத்தின்சின்னம்; தமிழ்ப்பண்பாட்டின் கண்ணுடி; பொதுமக்களின் பல்கலைக் கழகம்; மக்கள் உணர்வைத் தட்டியெழுப்பி அன்பையும் அறிவையும் வளர்த்து மங்காப் புகழ்படைத்த கலைஞன்.

**கலாநிதி சு.வித்தியானந்தன்.**

### பின்னிப்பிணைந்த வாழ்க்கை

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு இலங்கையின் நாடக வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்த தொன்றென்று கூறினுல் இதுமிகையாகாது.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் நாடகக் கலைக்கு ஆற்றிய தொண்டினும் மேலாக அவரது வாழ்க்கையே இக்கால மக்களுக்கு பெரிதுமோர் உணர்வை ஊட்டுவதாகும். எப்பொழுதும்கட்டுப்பாடோடும், நிதானத்துடனும் வாழ்ந்த இவர் எத்தொழிலைச் செய்தவிடத்தும், ஏதவத்தைப் பட்ட பொழுதும் நேர்மைக்கு அணிகலனுய் விளங்கினுர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதேச கலைமன்றம் உண்டான நாள்முதல் கலையரசு அவர்கள் அதற்கு பக்கபலமாய் அமைந்து அரும்பணியாற்றினுர் அதன் நிர்வாகசபையின் அங்கத்தவராகவும்அயராதுஉழைத்துள்ளார், நான் அம் மன்றத்தின் செயலாளராகக் கடமையாற்றிய பொழுது அவரோடு சேர்ந்து உழைக்கும் பெரும்பேறுபெற்றதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

கலையரசு அவர்கள் நீடுழி வாழ்ந்து நாடகத்துக்கும் கலைகளுக்கும் பெருப்பணி புரிய இறைவன் அருள்புரிவாராக.

**எஸ். சிவஞானம்**
உதவிஅரசாங்கஅதிபர்.
திருக்கோணமலை.

# நவீனபாலம் 22-ல் திறக்கப்படும்

அளவெட்டி, ஞாயிறு

தெல்லிப்பழையில் அமையும் யாழ். மாவட்டத்துக்கான நவீன பாலத்தை இம்மாதம் 22-ந் திகதி காலை 9.15க்கு காங்கேசன்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு' எஸ். ஜே. வி. செல்வநாயகம் திறந்துவைக்கவிருக்கிறுர்.

அன்றுகாலை 7 மணிக்கு தேசியக்கொடி ஏற்று வைபவத்துடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் 7-15 மணிக்கு வானெலியில் உள்ளூராட்சி அமைச்சர்நிகழ்த்தும்செய்தி ஒலிபரப்பாகும்.

பின் 7-30 மணிக்கு பகிரங்கக்கூட்டம் நடைபெறவிருக்கிறது. தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் திரு. எம். சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் பீட்டர்ஸ் மகாஜனக்கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு, ஏ. ஏ. யோசெப், வலி-வடக்குக் காரியாதிகாரி திரு. பி.எஸ். பற்றிக்ஸ், மாநில பொறியியலாளர் திரு, சி. புவனேஸ்வரன் ஆகியோர்உரையாற்றுவர்.

அடுத்து விளையாட்டு விழா ஒன்று நடைபெறும். சைக்கிள் ஓட்டப்போட்டி, கயிறிழுத்தல், வினேத உடைப் போட்டி முதலியபல போட்டிகள் இவ்விளையாட்டு விழாவில் இடம்பெறும். இப் போட்டிகளில் பங்குபெற விரும்புவோர் இம்மாதம் 17-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளனர்.

இப்புதிய கட்டிடத்துக்குப் பெயர் எதுவுமிடவில்லை தம்வாழ்நாளில் பெரும் பகுதியை அதின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்த அதிபர் மிஸ் தம்பையாவின் பெய

எல்லி யும் பகலும்
மிசை வானவர்
சொல்லி டீர் நுந்
துயரங்கள் தீரவே.
—அப்பர் அடிகள்.

# கலையரசர் விழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை இளம் நடிகர் சங்கத்தினரின் ஆதரவில் நடைபெறும் கலையரசர் விழா இன்று மாலை யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. பிரபல சினிமா நடிகர் டி. கே. எஸ். சகோதரரான திரு. டி. கே. பகவதி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ்விழா கலாநிதி சு. வித்தியானந்தம் தலைமையில் நடைபெறும்.

இன்றுகாலை 11-20மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடையும் திரு. டி. கே' பகவதியை அகில இலங்கை இளம் நடிகர் சங்கத்தினரும், கலையரசுசொர்ணலிங்கமும் அவரது பாரியாரும் விமானநிலையத்தில் வைத்து வரவேற்பர். இன்று கலையரசு இல்லத்தில் மதிய போசன விருந்தில் கலந்துகொள்ளும் திரு. பகவதி, மாலை 3 மணிக்கு பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டிஒன்று அளிப்பார்

மாநகரசபை முதல்வர் திரு. எஸ். நாகராசா குத்து விளக்கேற்றி ஆரம்பமாகும் இவ்விழாவில் மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும்.

இளம்நடிகர் சங்கப் பொருளாளர் திரு. இ. யோகேந்திரநாதன் வரவேற்புரை நிகழ்த்துவார். கலையரசரால் எழுதப்பட்ட 'ஈழத்தில் நாடகமும் நானும்' என்னும் நூலை தேவன் யாழ்ப்பாணம் அறிமுகம் செய்துவைப்பார். திரு. பகவதி நூல் வெளியீட்டில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார் செனட்டர். ரி. நீதிராசா ஜே. பி. முதற்பிரதியைப் பெறுவார். திரு. கே. பி. ஹரன், திரு. எஸ். முத்துத்தம்பி முதலியார். வழக்கறிஞர் எஸ. ஆர். கனகநாயகம் ஆகியோரும் பேசுவர் (ந. நி)

### கச்சதீவில் கண்டவை

--நமது அலுவலக நிருபர்--

வாழத்தெரியாதவர் (தனக்காக) பிழைக்கத்தெரியாதவர் (பொய்சொல்லி) காமராஜர் படத்துக்குக் கீழே இப்படி அச்சடிக்கப்பட்டிருந்தது. இந்தப்படத்தைஒருவர் தமது கூடாரத்துக்கு முன்னுல் தொங்கவிட்டிருந்தார்.

0 0 0

படக்கடைகளில் அண்ணுதுரை, கருணுநிதி, எம். ஜி ஆர். படங்களே அதிகம் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன.

0 0 0

பல இடங்களில் பகிரங்கமாக சூது விளையாடப்பட்டது.

15-ம் திகதி இரவு காற்று வேகமாக வீசியதால் நங்கூரமிடப்பட்டிருந்த இயந்திர படகுகள் ஒன்றுடொன்று மோதிக் கொண்டன. இது படகுக் காரர் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

0 0 0

திருநாளின் முதல் நாள் ஒன்றுகக்கூடிய சிலர் திருநாள் முடிந்து பிரிந்துசெல்ல நேரிட்டபோது கண்ணீர் சொரிய நின்றகாட்சி மனமுருக்கும் நிகழ்ச்சி.

### 'சேவையை நீடிக்கவும்'

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிவரும் டாக்டர் திரு. இராஜரத்தினத்தின் சேவையை நீடிக்குமாறு கோப்பாய் கிராம சபை. மேலதிகாரிகளைக் கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org